# வடக்கு-கிழக்கு மாகாணசபையின் யாழ்ப்பாணக் கிளை அலுவலகம் நேற்று மூடப்பட்டது!

(மானிப்பாய்)

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் யாழ்ப்பாணக் கிளை அலுவலகம் நேற்றுடன் மூடப் பட்டது.

யாழ். செயலகத்தில் கடந்த சில மாதங்களாக இயங்கி வந்த இவ்வலுவலகம், தற் போது செயல் இழந்ததை அடுத்து அங்கு பணிபுரிந்த சுமார் 16 ஊழியர்களும் இம் மாதத்திலிருந்து யாழ். மாவட்ட ஆணையாளர் அலு வலகத்திலும், உதவி ஆணை யாளர் அலுவலகங்களிலும் பணிபுரியுமாறு வடக்கு-கிழக்கு மாகாண அரசின் உள்துறை அமைச்சு நியமனக் கடிதங்களை அனுப்பியிருந்தது. இதனைத்

(8ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 32 | பங்குனி: 9 | ஷஃபான் பிறை: 24 | இதழ்: 38

யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 22-03-1990

## அன்னை பூபதிக்கு பண்டத்தரிப்பிலும் அஞ்சலி

(பண்டத்தரிப்பு)

சாகும்வரை உண்ணாவிரத மிருந்து தியாக மரணமடை ந்த அன்னை பூபதி கணபதிப் பிள்ளையின் இரண்டாவது நினைவு தினத்தை முன்னிட்டு பண்டத்தரிப்பு சந்தியில் அன் னாரின் உருவப்படம் வைக் கப்பட்டு மலர் மாலைகளினால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

சங்கானை, சித்தன்கேணி, சுழிபுரம், வட்டுக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள முக் கிய சந்திகளிலும் அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் திருவுருவப்படம்வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு வரு கின்றது. (72)

# தமிழ் நாட்டில் அகதிகளுக்குமட்டும் அனுமதி

# போராளிகளுக்கு இடமில்லை!

## சட்டசபையில் கலைஞர் விளக்கம்

(சென்னை)

"தமிழ்நாட்டில், இலங்கைத் தமிழ் அகதிகள் தங்குவதற்கு மட்டும் அனுமதி வழங்கப்படும். தமிழ்ப் போராளிகளுக்கு எவ்வித கார ணத்திற்காகவும் அனுமதி வழங்கப்படமாட்டாது" என்று தமி ழக முதல்வர் திரு. மு. கருணாநிதி நேற்று சட்ட சபையில் தெரிவித்தார்.

சட்டப் பேரவை எதிர்க் கட் சித் தலைவர் திரு. ஆர். எஸ். ராதா எழுப்பிய ஒழுங்குப் பிரச்னை தொடர்பாகப் பேசிய முதலமைச்சர், இலங்கைத் தமிழ்ப் போராளிக் குழுக்கள் எதுவும் தமிழ் நாட்டிற்குள் நுழைந்துவிடாமல் இருக்கத் தாம் நடவடிக்கை எடுத்திருப் பதாகக் கூறினார்.

போராளிக் குழுக்கள் தமிழ் நாட்டிற்குள் புகுந்தால் வன் செயல்கள் ஏற்பட்டு சட்டம் ஒழுங்குப் பிரச்சனை தோன்று மென்றும், இதனால் தமிழகம் அமளிக் கூடமாவதை மாநில அரசு விரும்பவில்லை என்றும் கூறினார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## விதவைகள் புனர்வாழ்விற்கு உதவ ரி.ஆர்.ஆர்.ஓ. ஆய்வு

(யாழ்ப்பாணம்)

வன்செயல் காரணமாக வித வைகளாக்கப்பட்ட பெண்க ளின் புனர் வாழ்விற்கான உதவித் தேவைகளை இனம் கண்டறிவதற்கான ஆய்வு ஒன்றினை அகதிகள் புனர் வாழ்வுகழகம்(ரி.ஆர்.ஆர்.ஓ.) மேற்கொள்ளவுள்ளது.

சுவிடிஷ் சர்வதேச அபிவிரு த்திச்சங்க அமைப்பின் உதவி யுடன் இவ்வாண்டு ஜூன் மாதத்தில் இத்திட்டம் செய ற்படுத்தப்படவுள்ளது.

பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், சமூக சேவை யாளர்கள், புத்திஜீவிகள் ஆகி யோரை உள்ளடக்கிய இது தொடர்பான கலந்துரையாட லொன்று அடுத்தமாதம் 5-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடை பெறவுள்ளது. (து)

## இந்தியப் படையின் கடைசிப் பிரிவு நேற்று தாயகம் திரும் பியது!

[சென்னை]

இலங்கைக்கு முதல் முத லாக அனுப்பி வைக்கப்பட்ட இந்திய அமைதிப்படைபிரிவு நேற்றுத் தாயகம் திரும்பியது.

மேஜர் ஜெனரல் ஆர். என். பர்லா தலைமையில் நேற்று சென்னை வந்து சேர்ந்த 2500 அமைதிப்படையின ருக்கு துறைமுகத்தில் வர வேற்பளிக்கப்பட்டது.

அமைதிப்படையின் தள பதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் சந்தேஷ்பாண்டே தென்பிராந்திய இராணுவ தளபதி மேஜர் ஜெனரல்

(8-ம் பக்கம் பார்க்க)

## இளைஞர்களின் அபிலாஷைகளுக்கு உரிய இடமளிக்கப்படும்- ஜனாதிபதி

(கொழும்பு)

எத்தகைய பிரச்னைகள் இருந்த போதிலும் இளைஞர் களின் அபிலாஷைகளுக்கு உரிய இடமளித்து புதிய சமு தாயம்ஒன்றைக் கட்டியெழுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப் படும்.

ஜனாதிபதி திரு ஆர். பிரேம தாசா இவ்வாறு கூறினார்.

(8ம் பக்கம் பார்க்க)

## கனடா தமிழருக்கு உதவ தமிழீழ சங்கம் திட்டம்

(ரொரன்டோ)

கனடாவிற்கு வந்துள்ள தமி ழர்கள் தொடர்பான குடி யேற்ற தகவல் சேகரிப்பு செயற்பாட்டுத் திட்டமொன் றினை தமிழீழச் சங்கம் நடை முறைப்படுத்தவுள்ளது.

இங்குள்ள தமிழ் மக்களின் தேவைகள், அவர்களுக்கு அர சினால் வழங்கக்கூடிய சேவை கள் பற்றிய விபரங்களை சேக ரிக்க இத்திட்டம் பயன்படும் என்று தமிழீழச் சங்க உறுப் பினர் தெரிவித்தார். (து)

## முன்னாள் பிரதி அமைச்சர் காலமானார்

(கொழும்பு)

முன்னாள் பெருந்தோட்டத் துறை பிரதி அமைச்சர் திரு. ஈ. எல். விஜேமான்ன நேற் றுக் காலை தமது 81வது வய தில் காலமானார்.

1960ம் ஆண்டு இவர் அரசிய லில் பிரவேசித்தார். 1977ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் களுத்துறைத் தொகுதியில் போட்டியிட்டு

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரி 5 மாடிக் கட்டடம்:

## அதிகாரிகள் மட்டத்தில் மாநாடு கூடி ஆராயும்

(யாழ்ப்பாணம்)

பிறப்பு அத்தாட்சிப் பத்தி ரங்கள் கோரி, 25,000 விண் ணப்பங்கள் தேங்கிக்கிடக்கின் றன. இந்த விண்ணப்பதாரி களுக்குப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கத் துரித நடவடிக்கைகள் மேற்கொண் டுள்ளேன். இதனைக் கருத்திற் கொண்டு புதிய விண்ணப்பங் கள் ஏற்பதை இரு வாரத் துக்கு நிறுத்தி வைத்துள் ளோம்'' என்று யாழ் அர ங்க அதிபர், திரு. அன்ரன் அல்பிரட் கூட்டிய பத்திரிகை யாளர் மாநாட்டில் தெரிவித் தார்.

''கடந்த மூன்று நாட்களும் மீசாலைவடக்கு, உசன், வரணி

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். செஞ்சிலுவைச் சங்கம் இன்று கொடித்தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செஞ்சிலு வைச் சங்கம் நடத்தும் வரு டாந்தக் கொடி தினம் இன்று வியாழக்கிழமை பாடசாலை களில் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 27ம் திகதி பாட சாலைக்கு வெளியே பொதுமக் கள் மத்தியில் இக்கொடிதினம் நடைபெறவுள்ளது.

இக்கொடிதினம் தொடர் பாக யாழ். செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் ஆர். தெய்வேந்திரன் விடுத்த வேண்டுகோளில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

''எமது பணிகளுக்கு மக்க ளின் ஆதரவும், சர்வதேச

(8ம் பக்கம் பார்க்க)

## மக்கள் குறைபாடுகளை மாத்தயா நேரில் அறிந்தார்

(மருதங்கேணி)

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் திரு கோ. மகேந்திரராசா (மாத் தயா), கடந்த ஞாயிற்றுக் கிழமை மருதங்கேணிக்கு விஜ யஞ் செய்தார்.

[8ம் பக்கம் பார்க்க)

## பாலஸ்தீன இயக்கத்தை இலங்கை ஆதரிக்கும்

(கொழும்பு)

பாலஸ்தீன விடுதலை இயக் கம் அமைந்திருக்கும் பாலஸ் தீன நாட்டை இலங்கை அங் கீகரிக்கப் போவதாக அறி வித்துள்ளது.

இலங்கையில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அலுவ லகத்திற்கு ஒருநாட்டின் தூதர கத்திற்கு வழங்கப்படும் அந் தஸ்து வழங்கப்படும் என்றும் அறிவிக்கபபட்டுள்ளது.

இலங்கையின் இந்த முடிவு குறித்து பாலஸ்தீன விடுதலை இயக்கம் மகிழ்ச்சியும் பாராட் டும் தெரிவித்துள்ளது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய, பீற்றூட், கோவா, விதைகள் விற்பனைக்குண்டு பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி 3625)

பின்வரும் 2 லொறிகளும் கார் ஒன்றும் விற்பனைக்கு உண்டு. 24 Sri 6431 B. M. C. லொறி, 24 Sri 3251 B. M.C லொறி, கார் 8 Sri 3174 [மொறிஸ் ஒக்ஸ்போட்], Paper Cutter 24 Inch தொடர்பு கொள்ளவும்: எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி, 53, K. K. S. வீதி, யாழ்ப்பாணம். (3628)

எங்களிடம் பாடசாலைப் பிள்ளைகளின் ரை (Tie) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: நியூ வசந்தா ரெக்ரைல்ஸ் பிறின்ரிங் சென்ரர், 248, K. K. S. வீதி, யாழ்ப்பாணம். (3629)

14 இஞ்சி கிறைண்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: எஸ். சுப்பிரமணியம் & கொம்பனி, 53, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி-3633)

### புத்தகங்கள்

ஆண்டு 6 சமூகக் கல்வி வரலாறு செயல் நூல் விற்பனையாகிறது. ஆக்கம்: துரைசிங்கம். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (எ-526)

### தேவை

சமையல்காரர், சமையல் வேலை பழகுபவர்கள், உணவு பரிமாறுபவர் தேவை. யாழ். சைனீஸ் றெஸ்ரோறன்ற், முதலாம் குறுக்கு தெரு. யாழ்ப்பாணம். நேரில் வரவும் (காலை 9-00 — 11-00 வரை) அல்லது விண்ணப்பிக்கவும் (சி-3631)

### FOR SALE

Pure Alsation pups, Two months old. Weaned and wormed twice. Contact:- "Zion Lodge" 184, Chemmany Road, Nallur. (C-3632)

## புதிய நெல்லினம் அறிமுகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை சிறுபோகவேளாண்மையை மேற்கொள்வதற்கு 'ஏ. ரீ. 85/1' எனப்படும் புதிய இன நெல் வர்க்கம் அறிமுகம் செய்யப்படவுள்ளது. இந்த நெல்லினம் அமோக விளைச்சலை ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## சமாதான நீதவான்

[கோப்பாய்]

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த திரு. சிதம்பரப்பிள்ளை இராஜரத்தினம் சமாதான நீதவானாக பிரதம மாஜிஸ்திரேட் நீதிமன்ற மேலதிக மாஜிஸ்திரேட் என். யோகசிகாமணி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தரான இவர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பழைய மாணவனும், சமூகசேவையாளருமாவார்.

## நயினையில் மகா சங்காபிஷேகம்

(நயினாதீவு)

நயினாதீவு நாகபூசணி அம்மன்கோவிலில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8-00 மணி முதல் அம்பாளுக்கு 1008 மகா சங்காபிஷேகம் நடைபெற்று உள்வீதி திருவுலாவும் நடைபெறும்.

வழமைபோல் அமுதசுரபியில் அன்னதானமும் இடம் பெறும்.

## கல்வி கலாசார சுற்றுலா

[யாழ்ப்பாணம்]

ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கத்தினர், அகில இலங்கை ரீதியில் கல்வி கலாசார சுற்றுலா ஒன்றை 23ம் திகதி முதல் 28ம் திகதிவரை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

கொழும்பு, கண்டி, காலி, கதிர்காமம் போன்ற முக்கிய இடங்களை இவர்கள் பார்வையிடுவார்கள். [152]

## விவசாயக் கடனுதவி ரூ. 38லட்சம் வழங்கப்பட்டது

(மாங்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடன் உதவு கூட்டுறவுச் சமாசத்தினால் கடந்த வருடம் இறுதிவரை இம் மாவட்ட விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவி 38 லட்சத்து 25 ஆயிரத்து 288 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதியில் முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 9 லட்சத்து 5 ஆயிரத்து 258 ரூபாவும், துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 8 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவும் விவசாயக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளன.

இம் மாவட்டத்தில் இச் சமாசத்தினால் படித்து வேலையற்றிருக்கும் 100 யுவதிகளுக்கு சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக தையல் மெஷின்களும் வழங்கப்பட்டுள்ளது.

இவ் வருடத்தில் விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டோருக்கு முல்லைத்தீவு அரசாங்க அதிபரிடமிருந்து கடன்பெற்று தலா 5000 ரூபா வழங்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடன் உதவு கூட்டுறவுச் சமாசத்தின் தலைவர் திரு. எஸ். சிவானந்தன் 'ஈழநாடு'வுக்குத் தெரிவித்துள்ளார். (150)


## Vespa(வெஸ்பா) PL170 ஸ்கூட்டர்

புதிய கவர்ச்சியானதும் சிக்கனமுமான வெஸ்பா (Vespa) PL 170 ஸ்கூட்டர் 96 CC விற்பனவுக்குண்டு. கலனுக்கு 260 KM வேலை செய்யும். பார்வையிடலாம். பதிவு செய்வோருக்கு முன்னுரிமை.

தொடர்பு:

3, நவீனசந்தை (மேல்மாடி)

யாழ்ப்பாணம்.

(ஏ 624)


சகலவிதமான இறக்குமதி செய்யப்பட்ட
திருமண, பிறந்ததினவிழா அழைப்பிதழ்களுக்கும்
தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உற்பத்திகளுக்கும்
பாடசாலை, காரியாலய உபகரணங்கள்,
மின்சார அலங்காரப் பொருட்களுக்கும்
நியாயமான ஸ்தாபனம்:

## அம்பலவாணர் அன் சன்ஸ்

196, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(எ-557)


## அமரர் லெப். மரியதாஸ் அவர்களின் இரண்டாவது ஆண்டு இதய அஞ்சலி



வீரஜனனம்; 16-12-1961

வீரமரணம்: 22-3-1988

22-3-88ல் விசுவமடுவில் நடந்த இந்திய ராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த லெப். மரியதாஸ் விடுதலைக்காக எமது உள்ளங்களில் கல்லறை சமைத்தாயோ?

காலமலரில் இதழ் இரண்டும் உதிர்ந்து விட்டது;
ஆனாலும் கண்ணீர் மட்டும் இன்னமும்......
பூக்களாய்ச் சிந்தும்...! ஆம் என்றும் சிந்தும் !!

பெற்றோர்,
உறவினர். நண்பர்கள்.
கோவில்குடியிருப்பு. சாவகச்சேரி.
(சி 3630)


## சென்றல்-சென்.ஜோன்ஸ் BIG MATCH

### ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி

உங்களின் வசதிகருதி OLD PARK CHINESE RESTAURANT தனது விசேட விற்பனைச் சாலையை கிரிக்கெற் மைதானத்துக்கண்மையில் இரண்டு நாட்களுக்கு திறந்திருப்பார்கள்

அங்கு மதிய உணவுவகைகள், சிற்றுண்டி வகைகள், குளிர்பான வகைகள் பெற்றுக்கொள்ளலாம். விசேட ஓடர்கள் முன்கூட்டியே ஏற்றுக்கொள்ளப்படும்.

அதிசிறந்த உணவுவகைகளும், சிற்றுண்டி வகைகளும் OLD PARK CHINESE RESTAURANT இல் காலை 10.00 மணி தொடக்கம் இரவு 10.00 மணிவரை கிழமையில் எல்லா நாட்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

OLD PARK CHINESE RESTAURANT

OLD PARK
CHINESE
RESTAURANT

207, Old Park Road, Jaffna.

(C-628)

## கம்பியூட்டர் கல்வி

Diploma in data Processing and Computer Programming in Basic Language

ஆரம்பம்:

28 Mar. 90 (திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்) 10-30 a. m.

07 Apr 90(சனி, ஞாயிறு வகுப்புக்கள்) 11-00 a.m.

கட்டணம் 1500/-

### ★ Word Processing

ஆரம்பம்: 25 MAR. 90

O/L படித்த இருபாலாரும் சேரலாம். மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். சேரும்பொழுது செலுத்த வேண்டியது ரூபா 500/- மாத்திரமே.




UNIKCO
COMPUTER
CENTRE

No. 5, Power House Road,
2nd Lane, Jaffna.

(ஏ 627)

# இந்திய ராஜதந்திர - பொருளாதார உறவை பாகிஸ்தான் துண்டிக்க வேண்டும்

## தீவிரவாதிகள் கோரிக்கை

(ஸ்ரீநகர்)

**இந்தியாவுடனான ராஜதந்திர தொடர்புகளை உடன் நிறுத்தி பொருளாதார உறவுகளை பாகிஸ்தான் துண்டிக்க வேண்டுமென 'ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி' பாகிஸ்தானுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது. ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட ஊர்வலம் ஒன்றில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.**

காஷ்மீரின் சுதந்திரப் போராட்டத்தை இந்தியா இராணுவ ரீதியில் அடக்கிவருகிறது. இதனைக் கண்டித்து பாகிஸ்தான் மேற்படி தமது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்றும் இந்த முன்னணி கோரியுள்ளது.

கடந்தவாரப் பிற்பகுதியில் ஜம்மு–காஷ்மீரில் இந்திய மத்திய அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து பெரும் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. இதில் பெண்கள், சிறுவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். இவ் ஊர்வலத்தில் இந்தியாவுக்கு எதிராகக் கோஷமிடப்பட்டதுடன் சுலோக அட்டைகளும் எடுத்துச் செல்லப்பட்டன.

இவ் ஊர்வலம் நடைபெற்ற போது இராணுவம் பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது. அங்கு இராணுவத்திற்கெதிராக கோஷமிடப்பட்டபோதும் இராணுவத்தினர் எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லையென இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### பெனுஷிர் எச்சரிக்கை

இதேவேளை நேற்று முன்தினம் பாகிஸ்தானில் நடைபெற்ற பெரும் கூட்டமொன்றில் பிரதமர் திருமதி பெனுஷிர் பூட்டோ உரையாற்றுகையில்; இந்தியா காஷ்மீர் பிரச்சனைக்கு இராணுவ தீர்வைக் காண விரும்புகிறது. இது மோசமான விளைவுகளை ஏற்படுத்துமென்றும் எச்சரித்தார்.

இப்பிரச்சனையை சமாதான முறையில் இரு நாடுகளும் விரைவில் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் யுத்த சூழ்நிலை உருவாகுவதை தவிர்க்க வேண்டுமென்றும் முஸ்லிம் சமுதாய நாடுகள் இரு நாடுகளையும் கோரியுள்ளன. (சி)

---

### அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்

# புனரமைப்பு

[யாழ்ப்பாணம்]

அரசியல் சூழ்நிலை காரணமாகவும், அரசின் நெருக்கடி காரணமாகவும் கடந்த சில ஆண்டுகளாகச் செயற்படமுடியாது முடக்கி வைக்கப்பட்டிருந்த அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் யாழ் மாவட்டக் கிளை புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

புனரமைப்புக்கூட்டம் யாழ் கல்வித் திணைக்கள அலுவலகத்தில் நடைபெற்றது. அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் நீண்டகால உறுப்பினரான திரு. செ. பரராஜசிங்கம் சங்க யாழ் கிளையைப் புனரமைப்புச் செய்து வைத்துப்

(6ம் பக்கம் பார்க்க)

---

### கலைப்பொருள்கள் திருட்டு:

# மேற்கு நாடுகளில் இது ஒரு கலை!

(பொஸ்ரன்)

கலைப்பொருள்களின் அருமை, பெருமை தெரிந்து அவற்றை களவாடுவது—கவர்ந்துசெல்தது மேற்குநாடுகளில் கைவந்த கலை.

2வது உலகப்போரின் மத்தியில், பிரான்சு நாட்டு கலைப் பொக்கிஷங்களைக் கவர்ந்து செல்ல முயன்ற ஜேர்மன் நாஸிப் படைத்தளபதி, பிரான்சிய தேசியவாதிகளின் உயிர்த்தியாகத்தின் முன்னிலையில் படுதோல்வியேகண்டார்.

ஆனால், பணத்தின் அருமைக்காக, அண்மையில், கள்வர் கோஷ்டி ஒன்று பலகோடிக் கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்த ஓவியப்படைப்புகளை 'பொஸ்ரன்' நூதனசாலையிலிருந்து களவாடிச் சென்றுள்ளது.

பொலிசார் வேடமணிந்த இக்கள்வர் கோஷ்டி காவலர்களது கண்களைக்கட்டி, கைவிலங்கிட்டுவிட்டு, தமது கைவரிசையைக் காட்டிவிட்டது.

களவாடப்பட்ட ஓவியங்களில் வரலாற்றுப் புகழ்மிக்க ஐரோப்பிய ஓவியர்களான றெம்பிராண்ட்', 'வேர்மீர்' என்பவர்களது ஓவியங்களான 'கலிலேயக் கடல்மீது வீசிய புயல்' 'நாடகம்' என்பவை உலகத்திலேயே ஒரு சில மாத்திரம் எஞ்சியுள்ளன.

19ம் நூற்றுண்டில் அமெரிக்காவில் வாழ்ந்த கோடீஸ்வரர் மனைவி 'கார்டினர்' அவர்களது அரிய முயற்சியினால் கோடிக் கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்த உலகக்கலைப் பொக்கிஷங்கள் இந்த நூதனசாலையில் சேகரித்து வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (அ)

---

### ஜெயலலிதாவின்

# கார்விபத்துகுறித்து நீதி விசாரணை

[சென்னை]

அ. தி. மு. க. பொதுச்செயலர் செல்வி ஜெயலலிதாவின் கார் விபத்து சதி நடவடிக்கையா என நீதி விசாரணை நடத்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இத்தகவலை முதல்வர் திரு. மு. கருணாநிதி மாநில சட்டசபையில் தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணையில், 1988ம் ஆண்டு முதல் செல்வி ஜெயலலிதா சுமத்திவரும் சகல குற்றச்சாட்டுகளும் சேர்க்கப்படவேண்டும் என்றும் முதல்வர் கூறியுள்ளார்.

கடந்த பல வருடங்களில் தாம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தகாலத்தில் தாமும் ஏனைய பல தலைவர்களும் இவ்வாறான பல விபத்துக்களை சந்தித்தபோது அவற்றை யாரும் கொலைமுயற்சி எனக் கூறவில்லை என்றும் திரு. கருணாநிதி தெரிவித்தார். [சி]

---

# லிபியாவிற்கு மீண்டும் அமெரிக்கா எச்சரிக்கை

(நியூயோர்க்)

லிபியா, இரசாயன ஆயுதங்களை தயாரிப்பதைகைவிடாத பட்சத்தில் அந்த தொழிற்சாலைகளை விரைவில் தாக்கப்போவதாக அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. இத்தகவலை 'நியூஸ் வீக்' சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

இரசாயன ஆயுதத்தொழிற்சாலையை மூடிவிடும்படி கடந்த சிலவருடங்களாக அமெரிக்கா லிபியாவை வற்புறுத்திவருகிறது. இது தொடர்பாக இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அமெரிக்கா முயற்சித்து வருகிறது.

இந்த இராஜதந்திர முயற்சிகள் தோல்வியுறும் பட்சத்தில் லிபியாவிலுள்ள இரசாயன ஆயுதத் தொழிற்சாலைகளைத் தாக்கி அழிக்கப்போவதாகவும் அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இதேவேளை கடந்தவாரம் லிபியாவில் இவ்வாறான தொழிற்சாலை ஒன்றில் இடம்பெற்ற வெடிவிபத்தொன்றில் பலத்த சேதமேற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் இதனை மறுத்துள்ள லிபியா வெடி விபத்தில் குறைந்த சேதமே ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் மேற்படி எச்சரிக்கையை அலட்சியம் செய்துள்ள லிபியா, இவ்வாறான நிலையொன்று ஏற்படின் அதனைச் சமாளிக்கும் விதம் எவ்வாறென்பது தனக்குத் தெரியுமென்றும் இதன்மூலம் அமெரிக்கா மோசமான எதிர் விளைவுகளைச் சந்திக்கவேண்டியிருக்குமென்றும் எச்சரித்துள்ளது. (சி)

---

# தமிழ் அகதிகள் குறித்து ஒரிஸா அரசு மீள்பரிசிலனை

## தப்பியவர்கள் தமிழகம் நுழையலாமாம்

(புவனேஸ்வர்)

ஒரிஸாவில் அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள தமிழர்களைத் தொடர்ந்தும் அங்கு தங்க அனுமதிப்பதா என்பது குறித்து மாநில அரசு மீள்பரிசீலனை செய்யவுள்ளது.

இத்தகவலை முதல்வர் திரு. பி. பட்நாயக் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கோரபுட் மாவட்டத்திலுள்ள அக்திகள் முகாமிலிருந்து 800பேர் தப்பியோடியதையடுத்தே இந்தமீள் பரிசீலனை நடவடிக்கையை அரசு மேற்கொள்ளவுள்ளது. தப்பியோடியவர்கள் தமிழ்க் குழுவொன்றைச் சேர்ந்தவர்கள் என்றும், இதனால் இங்கு தங்கியுள்ள ஏனையவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படலாமென்றும் அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தப்பியவர்கள் அனைவரும் அண்டை மாநிலமான ஆந்திரா ஊடாகத் தமிழகம் செல்லும் முயற்சிகளை மேற்கொள்ளலாமென்று சந்தேகிக்கும் ஒரிஸா முதல்வர், இதுகுறித்து தமிழக அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். தமிழக அரசும் எல்லைப்புறங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

### அரசு அதிர்ச்சி

நிராயுதபாணிகளாக அகதிகள் முகாம்களில் தங்கியிருந்தவர்கள் தப்பியோடிப் பிடிபட்டபோது அவர்களிடமிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளது மாநில அரசுக்குப் பெரும்அதிர்ச்சியளித்துள்ளது. இதன் பின்னணியில் ஏதாவது சக்திகள் இருக்கலாமென்றும் முதலமைச்சர் திரு. பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தப்பியோடியவர்களைத் தேடும் பலத்தமுயற்சியில் 'பரா' துருப்புகள் பெருமளவில் காடுகளில் குவிக்கப்பட்டுள்ளனர்.

---

# சோவியத் அதிபர் கொர்பச்சேவ் அமெரிக்காவில் தஞ்சம் புகுவார்?

## சோதிட சஞ்சிகை தகவல்

[வாஷிங்டன்]

அமெரிக்க சோதிடர்கள் இவ்வாண்டு நடைபெறவிருக்கும் பல விபரீதங்களை முன்கூட்டியே கணித்து வெளியிட்டுள்ளார்கள். இவற்றை வெளியீட்டு நிறுவனமொன்று 'அமெரிக்க ஜோதிடம் 89' என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளது.

இந்நூலில் குறிப்பிடத்தக்க சில பகுதிகளில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

சோவியத் யூனியன் ஜனாதிபதி கொர்ப்பசேவ் பதவியிலிருந்து வெளியேறி அமெரிக்காவில் தஞ்சம் புகுவார்.

கியூபா ஜனாதிபதி பிடல் கஸ்ரோ மேல் கட்டிடம் இடிந்து விழும். அதில் அவர் உயிர் துறப்பார்.

சோளக்கதிர்களுக்கு 'செக்ஸ்' உணர்ச்சிகள் அதிகரித்துள்ளதை சுவிடீஸ் விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பார்கள்.

முன்னைநாள் அமெரிக்க ஜனாதிபதி ரீகனுக்கும் அவரது மனைவிக்கும் ஆஸ்கார் பரிசுகிடைக்கும்.

அமெரிக்காவில் பறக்கும் தட்டு வந்துஇறங்கும்போது சகல பகுதிகளிலும் ஒரு மணிநேரம் மின்சாரம் தடைப்படும்.

அட்லான்டிக்கடலுக்கடியில் புதிய மொழிபேசும் மக்கள் வாழ்வதை விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பர்.

ஈரானிய கால்பந்தாட்டமைதான அரங்கமொன்று வெடிவைத்துத் தகர்க்கப்படும்.

அமெரிக்க அதிபர் புஷ் மீது அமெரிக்க சபை கண்டனத் தீர்மானம் நிறைவேற்றும்.

எயிட்ஸ் நோய்க்கு இவ்வாண்டு புதிய மருந்து கண்டுபிடிக்கப்படும்.

அறிவு வளர்ச்சியைக் கணக்கிடும் அமெரிக்கசபையின் உறுப்பினர்கள் அனைவரும் பதவிஇழப்பர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது [12]

---

# இன்று பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பளை மகாவித்தியாலய சாரணர்களையும், தலைவரையும் கௌரவிக்கும் முகமாக இன்று நண்பகல் பாராட்டு விழா ஒன்று நடைபெறவுள்ளது.

பளை மகாவித்தியாலயத்தில் பளைக் கொத்தணி அதிபர் ஆ. செல்லையா தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவில் பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். வேலாயுதமும். சிறப்பு விருந்தினராக உதவி அரச அதிபர் எஸ். கந்தசாமியும் கலந்துகொள்வர்.

கடந்த 14ம், 15ம் திகதிகளில் நடைபெற்ற முசுலாவது சார்க் ஜம்போறியில் கிளிநொச்சி மாவட்டத்தின் சார்பில் மேற்படி மாணவர்கள் கலந்து கொண்டமையைப் பாராட்டும் முகமாகவே இப்பாராட்டு விழா நடைபெறுகிறது. (க)

### மணிவாக்கு

கைக்கு அழகு கொடை, தலைக்கு அழகு பெரியோரைப் பணிதல், வாய்க்கு அழகு உண்மை, மனதுக்கு அழகு ஒழுக்கம், செவிக்கு அழகு நல்லன கேட்டல். — பத்ருஹரி நீதி.

## நமது நோக்கு

### ஆருடம் என்னாச்சு?

"இரத்தக்களரி ஏற்படும்!" — இப்படி ஒரு ஆருடம்.

"நெருக்கடி அதிகரிக்கும்....." — இப்படி ஒரு சோதிடம்.

"நிலைமை மோசமாகும் — 'அவர்கள்' உதவியை நாடவேண்டிவரும்!" - இப்படி இன்னோர் எச்சரிக்கை.

ஆனால் உண்மையில் நடப்பதென்ன? வரும் செய்திகள் என்ன?

"வடக்குக் கிழக்கில் தீர்க்கப்படாத பிரச்சனைகள் திருப்திகரமான முறையில் தீர்க்கப்பட்டன!" — இது அமைச்சர் ஹமீதின் கூற்று.

சமாதானக் குழுவின் தலைவராக அவர் பணியாற்றுகிறார்; சொல்லவேண்டியவர் சொல்லியிருக்கிறார்!

வெளிவிவகார அமைச்சராக பணியாற்றி, பல சமாதான மகாநாடுகளிற் பங்குபற்றிய அனுபவத்தோடு திருமலை சென்றிருக்கிறார் அமைச்சர் ஹமீது சட்ட அமுலாக்கல் அதிகாரிகளையும் விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளையும் சந்தித்திருக்கிறார்.

சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளில் அதிக கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றது.

இதேவேளை, பலாலி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி கூறியது என்ன?

"மக்கள் செல்வாக்குமிக்க புலிகளுடன் எதிர்காலத்தில் நல்லுறவுடன் இருக்கவே விரும்புகிறோம்!" — இது பிரஜைகள் குழுப் பிரதிநிதிகளிடம் அவர் கொடுத்த உறுதிமொழி.

ஏற்கனவே மக்கள் அனுபவித்த வேதனைகளை எவ்வாறாயினும் குறைத்திடவேண்டும், நிர்வாகம் ஒழுங்குபடுத்தப்படவேண்டும் என்பதில் விடுதலைப் புலிகள் உறுதியாக இருந்துவருகிறார்கள்.

இடையிலே......? எத்தனையோ இடர்ப்பாடுகள்— ஆருடங்கள் — இலவச ஆலோசனைகள் — மயக்கங்கள் — மாற்றுவழிகள்...!

விடுதலைப் புலிகள் மயங்கவில்லை; உறுதி தளரவில்லை.

கொள்கைப் பற்றும், இலட்சியத்தில் உறுதியும் கொண்ட தலைமை வழிநடத்துகின்றது.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்" — குறள் (666),

எண்ணுகின்றவர் செயல் ஆற்றும்போது உறுதியாக இருந்தால், எண்ணியதை எண்ணியவாறே அடைவார்.

உறுதியான தலைமையோடு மக்கள் சக்தி என்ற மாபெரும் சக்தியும் இணைந்துள்ளது.

இந்த நிலையில், பரபரப்புகளில் மக்கள் சக்தி வீணாகாது, வீண் ஆருடங்களால் மக்கள் மனநெருக்கடிகளுக்கு உள்ளாகாது, பொருளாதார, சமூக வளர்ச்சிக்கான பணிகளிற் பூரண கவனம் செலுத்தவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

## மாற்குவின் ஓவியக் கண்காட்சி

## ஓர் கண்ணோட்டம்

செல்வி அருந்ததி சபாநாதன்

ஓவியக் கண்காட்சி ஒன்று யாழ்ப்பாணத்தில் நடந்தால், 'பரவாயில்லை போய்ப் பார்ப்போம்' என்ற நிலையில் வந்து போகும் பார்வையாளர் தொகை காலத்திற்குக் காலம் கூடிக்கொண்டேதான்போகின்றது. இத்துறையின் வளர்ச்சிக்கு, இது நல்ல முன்னெடுப்பு என்றே கருதத் தோன்றுகின்றது.

இந்த வகையில் மார்ச் 17ம் 18ம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரியில் ஓவியர் அ. மாற்குவின் ஓவியச் சிற்பக் கண்காட்சி நடைபெற்றது. முற்றிலும் நவீன பாணிப்படைப்புக்கள் காட்சிக்குக் கொண்டு வரப்பட்டன. இக்கண்காட்சியைப் பார்த்த தொகையினரில் எத்தனைபேர் இரசித்தார்கள், விளங்கிக்கொண்டனர் என்பதுகேள்விக்குறியே! இருந்தாலும், நவீனபாணி ஓவியங்களையும் சிற்பங்களையும் எம் மக்களுக்கும் பரிச்சயப்படுத்துவதற்கு இம்மாதிரியான கண்காட்சிகள் அவசியமாகும்.

ஓவியரின் 40 வருட காலப் படைப்புக்கள் காட்சிக்குக் கொண்டுவரப்பட்டன. அவை காலத்திற்குக் காலம் போக்கிலும் நோக்கிலும் மாறிச்சென்றிருப்பதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது' தன்உணர்வு வெளிப்பாட்டை ரேகைகளுக்குள் அடக்கி ஓவியமாக்கியிருக்கும் திறன் மெச்சத்தக்கது. ஓவியர், ஓவியத்னூடாக வெளிப்படுத்தும் உணர்வுடன் ஒத்திசைந்ததாய்க் கோடுகள் வளைந்து நெளிந்து கொடுக்கின்றன. முதிர்ந்த உணர்வுகளும் அதை வெளிப்படுத்தும் முதிர்ந்த ரேகைகளுமே நவீன பாணி ஓவியங்களாய் வெளிப்படுகின்றன. ஓவியரின் இந்த முதிர்ச்சியான சிந்தனைகளுடன் ஒத்துப்போனவர்கள் பார்வையாளரில் மிகச்சிலரே. ஒன்றுக்குள் ஒன்றாய் சிதைந்து வெளிப்படும் உணர்வின் ஆழத்தைப் புரிந்து கொள்வதற்கு ஆழமான பார்வை அவசியமாகின்றது. இலகுவாகப் பார்த்து முடித்தும் போகக்கூடியதாயில்லாமல் நிறையத் தேடல்களுடன் பார்க்க வேண்டிய கண்காட்சியாகவே அமைந்திருந்தது.

கண்காட்சியின் 2ம் நாள் முடிவில் ஓவியர் இரமணியை இணைப்பாளராகக் கொண்ட கலந்துரையாடல் சுவாரஸ்யமான முறையில் நடைபெற்றது.

தனது, 'படைப்புகளை எந்த ஒரு கோட்பாட்டின் அடிப்படையிலும் படைக்காது உணர்வு ரீதியாகவே படைக்கிறேன், என்று கூறிக்கொள்ளும் ஓவியர் மாற்குவின் கோட்பாடுகள், உத்திமுறைகள் விரிவாக ஆராயப்பட வேண்டியன என்ற கருத்தை கலாநிதி சோ. கிருஷ்ணராஜா முன்வைத்தார்

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை முன்னாள் சித்திர விரிவுரையாளர் திரு. எஸ். கனகசபாபதி, ஓவியக் கண்காட்சிக்குஎத்தனை பேர் வந்தார்கள் என்பதல்ல, எத்தனை பேர் இரசித்தார்கள் என்பதே முக்கியம் என்றார்

ஓவியர் மாற்குவின் படைப்புக்களின் பரிணாம வளர்ச்சிப் போக்கை விரிவாகவும் ஆழமாகவும் திரு. கொ. றே. கொன்ஸ்ரன்ரைன் எடுத்துக்காட்டினார் ஓவியரின் ஆழமாகவும் கழுவு தற்பாணி ஓவியங்கள் தத்ரூபமானவையாகவும் நிறம் பற்றிய பிரக்ஞை கொண்டனவாகவும் இருக்கின்றன என்றும், தத்ரூபமாக ஒன்றை அவ்வாறே படைக்கும் திறன் கொண்ட ஒருவராலேயே தன் உணர்வுகளை அப்படியே தன் படைப்புக்குள் அடக்கிவட முடியும் என்ற கருத்தை ஓவியரின் படைப்புகளை உதாரணம் காட்டி உறுதிப்படுத்தினார்.

ஓவியர் நடராஜா, ஓவியர் மாற்குவை ஓர் நிறுவனமாகக் கருதுகிறேன் என்றும் இவரிலிருந்து ஓர் ஓவியப் பரம்பரை ஏற்பட வேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்தார்.

மற்றும் கவிஞர் வில்வரெத்தினம், ஓவியர் மாற்குவின் 40 ஆண்டுகால இடைவிடாத முயற்சி ஒரு தவ வெளிப்பாடாகவே கருதவேண்டுமெனக் குறிப்பிட்டார். முகமில்லாத இவரின் ஓவியங்கள் தனது முகத்தை முன்னிறுத்தாது உள்ளே தேடவைக்கும் தன்மையை எடுத்துக்காட்டுவதாகக் கூறினார்.

குப்பிளான் ஐ. சண்முகம், மாற்குவின் இராகங்களைச் சித்தரித்த ஓவியங்களும் இக்கண்காட்சியில் இடம்பெற்றிருககலாம்என்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். ஓவியர் இரமணி, மாற்கு அதிகம் நீர் வர்ணம், எண்ணைச்சோககு முதலான ஊடகங்களையே கையாண்டிருக்கிறார் என்றும், அவை நீண்டகாலம் பாதுகாக்க முடியாதன என்றும் தெரிவித்தார். ஓவியர் மாற்கு பதிலளிக்கையில், தான் கையாளும் ஊடகங்களூடாக தனது உணர்வுகளை உடனடியாகப் படைக்கக் கூடியதாகவுள்ளதாகவும் அதனால் தான் அதிகம் விரும்பி சிறியளவிலான படைப்புகளை ஆக்குவதாகவும் குறிப்பிட்டார். மற்றும் முன்னைய கண்காட்சிகளில் இடம்பெற்ற ஓவியங்களை மீண்டும் காட்சிக்குக் கொண்டுவருவதை தான் விரும்பவில்லை என்றும் குறிப்பிட்டார்.

முடிவில், ஓவியம் பற்றி விளங்கிக் கொள்வதற்கு எழுத்துருவில் விளக்கங்கள் கொண்டுவர வேண்டியுள்ளதும், பத்திரிகைகளூடாக ஓவியம் பற்றிய விடயங்கள் வெளிக்கொணர வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

## மக்கள் கருத்து

### பாடத்திட்டம் முடிக்காமல் பரீட்சையா?

அரச பாடசாலைகளில் முதலாம் தவணைக்கு உரிய பரீட்சைகள் ஆரம்பமாகியுள்ளன. ஆனால் சில பாடசாலைகளில் முதலாம் தவணைப் பாடத்திட்டம் முடிக்கப்படவில்லை. பாடத்திட்டம் முடிக்காமல் மாணவர்கள் எவ்வாறு பரீட்சையை எழுத முடியும்? ரியூசனில் பாடத்திட்டம் முடிக்கப்பட்டு இருக்கும். ஆனபடியால் பரீட்சை வைப்பதில் தவறில்லை என அதிபர்கள் கருதுகிறார்களா? ரியூசனுக்கு செல்ல இயலாத ஏழைப் பிள்ளைகளின் கல்வியை யார் முன்னேற்றுவது! யார் இதைப் பற்றிச் சிந்திப்பது?

ந. சிவரஞ்சன்,
செயலாளர்,
சுழிபுரம் கிழக்கு,
கிராம அபிவிருத்திச் சங்கம்.

## தவக்கால நற்சிந்தனை

### இறைவனிலே நமது பலம்

மனிதன் பலம் வாய்ந்தவன். ஆனால் அவனுடைய பலம் வரையறுக்கப்பட்டது. மருத்துவத் துறையிலே எலும்புக்கும். தசைக்கும் மருத்துவம் கண்டு கொண்டவன், உடலை விட்டுப்பிரியும் உயிரை நிறுத்தச்சக்தியற்றவன்.........

படைப்பாலே எல்லோரும் மனிதர்கள். ஆனால் அவர்களிடையே பலதர வேறுபாடுகளும், குறைபாடுகளும் உள்ளன. உடலிலே, உள்ளத்திலே, அறிவிலே, சிந்தனையிலே, விருப்பு வெறுப்புக்களிலே, பொருளாதாரத்திலே. பலதர வேறுபாடு பாடுகளும், குறைபாடுகளும் உள்ளன. இவையனைத்தும் ஏன்? மனிதன் முழுமையற்றவன். இறைவன் முழுமையானவன். இதை ஏற்றுக்கொண்டு எமது "குறைவான நிறைவிலே" தற்பெருமை பேசாது இறைவனுடைய பலத்திலே, தூய ஆவியானவரின் வல்லமையிலே நாம் நம்பிக்கை கொண்டு வாழும் போது நாம் எதிலும் ஒரு நிறைவைக் காணலாம்.

',மனித வலுவின்மையிற் தான் இறைவனின் வல்லமை சிறந்தோங்கும்" (2 கொரி 12:9) என்பது வேதாகமப் படிப்பினை. எனவே நமது சக்தியில், நமது பயிற்சிகளில், நமது திறமைகளில், நமது படிப்பு, பணம் முதலியவற்றில் நம்பிக்கை வைக்காது இறைபலத்தை நாடுவோம், "எனக்கு உறுதியூட்டும் இறைவனால் எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு என்ற புனித. சின்னப்பரின் உறுதுணை வாக்கியத்தை நாமும் கொண்டு செயற்படுவோம்.

அருட்திரு ஏ. எவ். பெனட்
மயிலிட்டி.

### வண்ணை வைத்தீஸ்வரனே!

வண்ணைவைத் தீஸ்வரனே! வந்தடியார்
போற்றநிதம்
பெண்ணை யிடம்வைத்த பேரிறைவா! —
உண்மையாய்
நல்லநிலை மைநமது நாட்டில் நிலைத்துநிற்க
நல்லவருள் செய்வாய் நயந்து.

★

அல்லலுற் றலற அன்று
அடியுதை பட்டு நொந்தோம்;
மல்லல்கொள் மாற்றார் வந்து.
மாய்த்தனர் நம்ம னோரை;
சொல்லுதற் கரிய துன்பஞ்
சூழ்ந்திட வாழ்ந்த லுத்தோம்.
நல்லருள் பாலித் தெம்மை
நனிதினி வாழ வைப்பாய்!

கவியரசு வெண்பாமணி
முருககூரியன்.

★ இன்று வண்ணை வைத்தீஸ்வரன் 2-ம் திருவிழா

## பலதும் பத்தும்

### அங்குமா சமரசம்!

"சமரசம் உலாவும் இடமே......!" என்ற சினிமாப் பாடலை, கணீரென்ற குரலில், மறைந்த சீர்காழியார்' பாடியதை எவர் தான் மறப்பர்?

அப்பாடலிலே குறிப்பிட்ட இடம்.......? சுடுகாடு. இனம், மதம், மொழி வேற்றுமைகட்கு அப்பாற்பட்ட இடம் என்ற தத்துவம் வலியுறுத்தப்பட்டது.

இன்றோர் காட்சி—இந்திய தொலைக் காட்சியிற் கண்ட காட்சி-பெங்களூர் விமான விபத்துப் பற்றிய காட்சி!

அடையாளம் தெரியாதளவிற்கு உடல்கள் சில கருகிப் போயிருந்தன.

இந்து, சீக்கிய. கிறிஸ்தவ, இஸ்லாமிய மதத்தலைவர்கள் அங்கு போயிருக்கிறார்கள். எவர் எந்த மதம் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. ஆத்தமது மதவழிப்படி இறுதிக் கிரியைகளைச் செய்திருக்கிறார்கள்.

ஆத்ம சாந்திக்காக, பல்வேறு சமயப் பிரார்த்தனைகளையும் ஒருங்கே செய்திருக்கிறார்கள்.

மத வேறுபாடுகளை அளவுக்கு மீறி வலியுறுத்துபவர்கள் இதிலிருந்து பாடம் பெற வேண்டாமோ?

வாணி

# "ஒன்றிணைந்து எமது உரிமைகளை வென்றெடுப்போம்"

## மக்கள் முன்னணி திறப்புவிழாவில் சூளுரை

[யாழ்ப்பாணம்]

"அனைத்துத்தமிழ் மக்களும் இணைந்து செயலாற்றக்கூடிய விதத்திலே 'விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி'யின் நிர்வாக அமைப்பு உள்ளது. இதில்சகலரும் ஒற்றுமையுடன் செயற்படுவதன் மூலம் எமது எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியும்."

இவ்வாறு கோண்டாவிலில் அமைக்கப்பட்டுள்ள 'விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணி' யின் யாழ் மாவட்ட தலைமைக் காரியாலயத்தை வைபவரீதியாக திறந்துவைத்துப்பேசிய அதன் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா [மாத்தயா] மதரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்: ''கடந்த பதினேழு வருடங்களாக அரசியல் பிரிவாக இருந்து செயற்பட்ட அமைப்பு இன்று அரசியல் கட்சியாக உருவெடுத்துள்ளது. இதில் சகல மக்களும் இணைந்து செயற்படும் விதத்தில் கட்சியின் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது'' எனறுர்.

இவ் வைபவத்தில் குத்துவிளக்கினை தியாகி திலீபனின தந்தை திரு. இராசையா ஏற்றிவைத்தார். யாழ் பிராந்திய பொறுப்பாளர் திரு. பானு விடுதலைப் புலிகளின் கொடியையும், அரசியல் பொறுப்பாளர் திரு. டொமினிக் கட்சியின் கொடியையும ஏற்றிவைத்தனர்.

இங்கு அமைக்கப்பட்ட மாவீரர் நினைவுத்தூபியை கடடன் மில்லரின் தாயார் திரை நீக்கம் செய்து ...

இவ் வைபவத்தில கலந்துகொண்ட அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் பேசுகையில

"தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்படவேண்டும். பேணப்படவேண்டும் என்ற நிலையில் ஜனுதிபதி திரு. பிரேமதாஸா உறுதியாக உள்ளார். இதன்மூலம் நாட்டில் அமைதியும் சமாதானமும் விரைவில் ஏற்படுத்தவும் அவர் முழு நடவடிக்கைகளையும் மேற்கொள்கிருர்.

'வரலாற்றுஅத்தியாயத்தில் பொதுமக்களின் பங்கு மிக முக்கியமானது. இதனை உணர்ந்து சகல மக்களும் உறுதியுடன் இணைந்து செயற்படவேண்டும்' என்றுர்.

இவ்விழாவில் திரு. டொமினிக்கும் உரையாற்றினுர். புலிகளின் யாழ். பிராந்திய முக்கியஸ்தர்கள் உட்பட பொது மக்கள் பலரும் கலந்துகொண்டனர். [சி]

முல்லைத்தீவில்

# சேதமடைந்த ஆலயங்களை திருத்துவதற்கு ஏற்பாடு

(புலோலி)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, கொக்குளாய் ஆகிய கிராமங்களிலுள்ள சேதமடைந்த ஐந்து கிறிஸ்தவ ஆலயங்களை திருத்த முல்லைத்தீவு அரச அதிபர் திரு. கே. பொன்னம்பலம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவ்வாலயங்களைத் திருத்துவதற்குமுன், நிர்வாக சபைகளை அமைப்பதற்கும், திருத்துவதற்கான மதிப்பீட்டை தயாரிக்கவும் பொறுப்பாளர்களை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நியமித்துள்ளார்.

ஒவ்வொரு ஆலயங்களுக்கும் நியமிக்கப்பட்ட பொறுப்பாளர் விபரம் வருமாறு:-

கொக்குத்தொடுவாய் இந்து ஆலயம்: உதவி அரசாங்க அதிபர் திரு. வி. கந்தசாமி, கிராமசேவை அலுவலர் திரு. த. ஜெகநாதன்.

கருநாட்டுக்கேணி இந்து ஆலயம்: கமநலசேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. செ.பஞ்சலிங்கம், கிராம சேவை அலுவலர் திரு. மி. ஞானேந்திரர்,

கொக்குளாய் இந்து ஆலயம்: கச்சேரி நிர்வாக உத்தியோகத்தர் திரு. க. தர்மலிங்கம், காணி அலுவலர் திரு. த. சிதம்பரப்பிள்ளை.

கொக்குளாய் கிறிஸ்தவ ஆலயம்: கமநலசசவைத்திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி பெற்றிசி, கிராம சேவை அலுவலர் திரு. கே. எஸ். அந்தோனிப்பிள்ளை. (61)

# சேவை மனப்பான்மையுடன் மாணவர் வளர வேண்டும்

(நாவற்குழி)

மாணவர்கள் ஒவ்வொருவரும் சேவை மனப்பான்மையுடன் வளரவேண்டும் என்றும் அவ்வாருகவளரும் மாணவர்கள் நாட்டின் நல்ல பிரஜைகளாக திகழ்வார்கள் என்றும் யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் கோட்டக்கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா குறிப்பிட்டார்,

அதிபர் திரு. கனகசிங்கம் தலைமையில் பெரியபுலம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் பண்டாரவன்னியன் இல்லம் 369 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும். சங்கிலியன் இல்லம் 234 புள்ளிகளைப் பெற்று, இரண்டாம் இடத்தையும், குளக்கோட்டன்இல்லம் 206 புள்ளிகளைப் பெற்று மூன்ரும் இடத்தையும், எல்லாளன் இல்லம் 177 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (107)

# வெளிக்கள நிலையம்

(அச்சுவேலி)

அச்சுவேலியில் செயற்படும் தொண்டைமானுறு கல்வி வெளிக்கள நிலையம் மீண்டும் தொண்டமானுற்றில் உள்ள சொந்தக் கட்டிடத்தில் இயங்கவுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து வெளிக்கள நிலையம் அச்சுவேலிக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

வெளிக்கள நிலையத்தில் இலங்கை இராணுவமும் அதனைத்தொடர்ந்து இந்திய அமைதிப்படையும் முகாம் இட்டிருந்தன. இந்திய அமைதிப்படை வெளிக்கள நிலையத்தைவிட்டு வெளியேறி இருப்பதால் கட்டடமும் சுற்றுடலும் சுத்தமாக்கப்பட்டு வருகின்றது. விரைவில் வெளிக்கள நிலையத்தின் செயற்பாடுகள் பழைய கட்டிடத்தில் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (74)

# முதலாம் தவணைப் பரீட்சை

(உடுவில்)

உடுவில் கொத்தணிப் பாடசாலைகளின் இவ்வாண்டு முதலாம் தவணைப் பரீட்சைகள் இம்மாதம் 26-ம் திகதி முதல் 28ம் திகதி வரை நடைபெறும் என்று உடுவில் சொததணிப் பாடசாலைகள் அதிபர் திருமதி எஸ். எஸ். குமாரசாமி அறிவித்துள்ளார். (109)

# சனசமூக நிலைய சமாசம் உப குழுக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரப் பகுதியிலுள்ள சனசமூக நிலையங்களின் இவ்வாண்டிற்கான செயற்திட்டங்களை அமுல்படுத்தும் முகமாக யாழ். மாநகர சனசமூக நிலையங்களின் சமாசம் உபகுழுக்களை தெரிவுசெய்துள்ளது.

சமாசத்தின் ஆட்சிக்குழுக் கூட்டம் சமாசத்தலைவர் கோ. தியாகராசாதலைமையில் நடைபெற்றபோது இவ் உபகுழுக்கள் தெரிவு செய்யப்பட்டன.

(கலை, கல்வி, கலாசாரக்குழு) தலைவர்: கவிஞர் தேவதாசன், செயலாளர்: இ. ரவீந்திரராஜா, உறுப்பினர் வ தம்பையா, (சமூகப் பணிக்குழு) தலைவர் ரி. மைக்கல், செயலாளர்; எம் எஸ். ஏ. காதர், உறுப்பினர்: ஜே. செபஸ்ரியன் (விளையாட்டுக் குழு) தலைவர்: எஸ். ரி. கணநாதன், செயலாளர் க. நவரத்தினம், உறுப்பினர்: அ கனகசபாபதி, (நிர்வாகசீரமைப்புக்குழு) தலைவர்; எஸ். யோசசிங்கம, செயலாளர் கா. பீதாம்பரம். (54)

# "சிறுவர்களுக்கு ஒரு தாஜ்மஹால்" நூல் வெளியீட்டில் பாராட்டு

[யாழ்ப்பாணம்]

''அண்ணு தன் தம்பிக்குக் கூறும் கதைப் பொழிவாகக் கவிஞர் சத்தியசீலன் ஆக்கித் தந்த இந்த 'சந்த மென்னடைச் சிந்து' அவரது பதினேழாவது சிறுவர் பாடல் ஆக்கம். எனினும் முன்னைய படைப்புக்களில் காணப்படாத கருத்தாழம் இந்நூலில் மிளிர்கிறது. கவிஞர் சத்தியசீலனை எழுத வைத்த சுவாமி ஜெயசீலன் உண்மையில் பாராட்டுக்குரியவர். கற்கண்டுச் சொற்கொண்டு கவிஞர் கட்டியெழுப்பிய இந்தக் கவிதாலயம் கலையழகு சொட்டும் கவினுலயம். தமிழ்ச் சிறுவர்களுக்கு ஒரு தாஜ்மஹால்''

அடைக்கல நாயகி ஆலய வளாகத்தில் இடம்பெற்ற உலகினுக்கு ஓர் 'உடன்பிறப்பு சாள்ஸ்திஃபுக்கோ' என்ற சிறுவர் நூல் வெளியீட்டு விழாவில் கலைஞர் நவாலியூர் நடேசன் இப்படிக் கருத்துத் தெரிவித்தார். முன்னதாக விழாவுக்குத் தலைமைவகித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் சுவாமி ஜெயசீலன்; புரட்சித் துறவி சாள்ஸ்திஃபுக்கோவின் வரலாற்றுச் சிறப்பைக்கூறி, சிறந்த தமிழ்க் கவிஞராகிய சத்தியசீலன் சிறந்த பிரஞ்சு எழுத்தாளராகிய பிறதர் சாள்ஸைப் பற்றி எழுதியமை சாலவும் பொருத்தம் என்றுர்.

''இளமையில் இராணுவ வாழ்வை ருசித்திட்ட லெப்ரினற் சாள்ஸ், பின்னர் அதன் போதாமையை உணர்ந்து பிறதர் சாள்ஸ் ஆகி, ஏழை முஸ்லிம் மக்களின் துயர் துடைத்து இன்னெரு கிறீஸ்துவாக வாழ முற்பட்டார் என்று அவர் கூறினுர். செல்வன் அன்ரன் அருள்வண்ணன் சிறுவர்கள் சார்பில் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டான். பாக்ஸ் கிறிஸ்கி அமைதி அருள் அமைப்பின் அங்கத்தவர்கள் பெருந்திரளாகக் குழுமியிருந்த கூட்டத்திலே ஆசிரியை திருமதி மேரி நாயகி மரியதாஸன் நூல் முழுவதையும் இசைப்பொழிவாக வழங்கிச் சபையோரின் பாராட்டைப் பெற்றுர்.

# இப்படியும் நடக்கிறது

யாழ். நகரில் வீதிப்போக்குவரத்து நடைமுறைகள் நேற்றுமுன்தினம் முதல் அமுலுக்கு வந்திருப்பது தெரிந்ததே.

சும்மா சொல்லக்கூடாது; போக்குவரத்து நடைமுறைகள் சிறப்பாகச் செயல்படுகிறது. பொதுமக்களும் பூரண ஆதரவு வழங்கியுள்ளனர்.

முதல் நாள். வண்ணர்பண்ணை சிவன் கோவிலுக்கு முன்பாக, போக்குவரத்து நடைமுறைகளைக் கவனிக்கும் கண்காணிப்பு ஊழியர் மிகவும் உஷாராக இருக்கின்ருர்.

திடீரென ஒரு வாகனம், மெதுவாக அவரை நோக்கி வருகிறது. அந்த கண்காணிப்பு ஊழியர். சைகை காட்டி நேராகப் போகவிடாமல் நிறுத்துகிருர். அந்த வாகனத்தைச் செலுத்தி வந்தவர், வெளியே தலையை நீட்டி ...(அன்பாக)......"டேய் நீயா ...என்ன நேராகப் போகட்டா..." என்று சிரித்துக்கொண்டே கேட்கிருர். கண்காணிப்பு ஊழியரோ மலர்ந்த முகத்துடன், "...ஐயா தயவு செய்து வலது பக்கம் (கன்னுதிட்டி வீதி வழியாக) போங்கோ..." என்று மிகவும் மரியாதையாகக் கூறுகின்ருர். காரும் அந்தப் பக்கமாக மெதுவாகத் திரும்புகிறது;

காதோடு காதாக: காரில் வந்தவர் முன்னர் யாழ். மாநகரசபையில் பெரிய பதவியில் ('டிப்பியூட்டி'யாக) இருந்தவர். அந்தக் கண்காணிப்பு ஊழியரையும் அவருக்குத் தெரிந்திருக்கலாம்.

ஒன்றரை நிமிட நேரத்தில் 'பாஸ்போர்ட்' விநியோகிக்கப்பட்ட விஷயம் இங்கு நீங்கள் தெரிந்ததே.

(அதனைப் படித்த பலருக்கு வாய் ஊறியதும் நாம் அறிந்ததே). அதனையொட்டிய மேலதிகத் தகவல்: 'பாஸ்போர்ட்'டுக்கு மொத்தம் 966 பேர் விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் 965 பேருக்கு அன்றையதினமே 'பாஸ்போர்ட்' கிடைத்துவிட்டது!

'ஊடுருவி'

# யாழ். பஸ் நிலையத்தில் 'பலே' ஆசாமிகள்!

## பெண்ணின் தங்கச்சங்கிலி திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ்நிலையத்தில் பட்டப்பகலில் பெண்மணி ஒருவரின் தங்கச் சங்கிலி திருடனுல் அபேஸ் செய்யப்பட்டது.

சுன்னுகம் செல்வதற்காகப் பஸ்ஸிற்காகக் காத்துநிற்கும் போது அருகில் பையொன்றுடன் நின்ற நபரொருவர் திடீரென அப்பெண்மணியின் கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தாராம். திருட்டுப் போன சங்கிலி நான்கரைப் பவுண் பெறுமதி என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். பஸ்நிலையத்தில் தற்போது முடிச்சுமாறிப் பேர்வழிகளும், ஏமாற்றுக்காரர்களும் நடமாடி வருவதால் பொதுமக்கள் தமது பணத்தையும், உடமைகளையும் பறிகொடுத்து 'அவல' நிலைக்காளாகி வருகின்றனர். (54)

# சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை ஆசிரியர் பெரும் கஷ்டம்

(வட்டுக்கோட்டை)

கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மூடும் பொழுது கடைசியாக அங்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பலர் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் இல்லாமையால் பதவி உயர்வு பெறமுடியாது பெரும் கஷ்டப்படுகின்றனர்.

இக் கலாசாலையில் கடைசியாகப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பலர் பதவி உயர்வுக்கான நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிப்பதற்கு இவர்களிடம் சான்றிதழ்கள் இல்லாமையினுலேயே பதவி உயர்வு கிடைக்காமற் போய் விட்டதாகச் சொல்லப்படுகிறது.

இந்த ஆசிரியர்கள் இக் கலாசாலை மூலம் பரீட்சைக்குத் தோற்றி, பரீட்சை எழுதி பின்னரே சான்றிதழ் பெற முடியாத நிலையேற்பட்டது.

இக்கலாசாலை மூடப்பட்டதனுல் இங்கிருந்த சகல ஆவணங்களும் கல்வி அமைச்சின் ஆசிரிய கலாசாலைப் பிரிவிற்கே அனுப்பி வைக்கப்பட்டிருக்க வேண்டும். இக் கல்லூரி நிர்வாகத்தினர் அனுப்பி வைத்தார்களோ அனுப்பி வைக்கவில்லையோ என்பது சரியாகத் தெரியாதிருக்கின்றதாம். இதனுலேயே ஆசிரிய மாணவரது விபரங்கள், அவர்களது பரீட்சைப் பெறுபேற்று விபரங்கள் என்பன அறிய முடியாதிருக்கின்றனவாம்.

இந்த விடயம்குறித்து கல்வி அமைச்சின் ஆசிரிய கலாசாலைப் பிரிவின் கவனத்துக்குக் கொண்டுவந்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையாமென இந்த ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (139)

# பொதுப் பரீட்சை இன்று ஆரம்பம்

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டம் நடாத்தும் முதலாம் தவணைக்கான பொதுப் பரீட்சை இன்று முதல் 29ம் திகதி வரை நடைபெறவுள்ளது. (139)

## ஐக்கிய அமெரிக்க நிதியுதவி ஸ்தாபன

# அதிகாரிகள் குடத்தனை கொத்தணிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

கிராமிய தற்சார்பு வளர்ச்சித் திட்டத்தை யாழ். கிளிநொச்சி மாவட்டங்களில் பின்தங்கிய ஐம்பது கிராமங்களில் ஊற்று நிறுவனம் அமுல் செய்கின்றது. இத்திட்டத்தைப்பார்வையிடுவதற்கும் கிராமியமக்களின் பிரச்சனைகளை நேரில் கேட்டறிவதற்குமாக ஐக்கிய அமெரிக்க நிதியுதவி ஸ்தாபனத்தின் நான்கு அதிகாரிகள் பத்துக் கிராமங்களை உள்ளடக்கிய குடத்தனைக் கொத்தணிக்கு விஜயம் செய்தனர். கிராமத்தையும் மக்களின் தொழில் முயற்சிகளையும் சவுக்கு மர வளர்ப்புத் திட்டத்தைரும் பார்வையிட்டனர்.

குடத்தனை அரகினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பிரதிநிதிகளையும் ஊற்று நிறுவனத்தினரையும் வரவேற்றுப் பொதுக்கூட்டம் நடாத்தப்பட்டது. செல்வி உமா வரவேற்புரை நிகழ்த்தினுர். அதனைத் தொடர்ந்து குடத்தனை தற்சார்பு வளர்ச்சிக் கழகத் தலைவர் செல்வன் சு. சிவகணேசன் கழக செயற்பாட்டு அறிக்கையையும், கிராமிய மக்களின் பிரதான கோரிக்கைகளையும் சமர்ப்பித்தார். அக்கோரிக்கைகள் வருமாறு-

கழகத்தினுல் அமுல் செய்யப்படும் சுழற்சி முறைக் கடன் திட்டத்திற்கு அதிக நிதி வழங்குதல்.

வடமராட்சி கிழக்குப் பிரதேச அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் பருத்தித்துறை — மருதங்கேணி வீதியை அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு காலதாமதமின்றி திருத்துவித்தல்.

அரசாங்கத்தினுல் ஆரம்பிக்கப்பட்டு பின் இடைநிறுத்தப்பட்ட சவுக்குமர வனவளர்ச்சித் திட்டத்தை பாரிய அளவில் விஸ்தரித்தல்.

வடமராட்சி உவர் நீர் ஏரியை நன்னீராக மாற்றும் திட்டத்தை மேற்கொள்ளுதல்.

சிறுர்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பாடசாலையைத் தரமுயர்த்தி, தளபாடம், விஞ்ஞான ஆய்வுகூடம் முதலியவற்றை வழங்க உதவி செய்தல்.

வன்செயலினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கென அங்கீகரிக்கப்பட்ட தொழில் ஊக்குவிப்பு, நிவாரணக் கொடுப்பனவுகளைக் காலதாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுத்தல்.

சிறு குளங்கள், சிறு வீதிகள் புனரமைப்புத் திட்டததின் நிர்மாண வேலைகளைக் கழகங்கட்குக் கொடுத்து மக்களைப் பங்கேற்பதற்கு ஊக்குவித்தல்.

திரு. எட்வேட் கிளாசியர் பதிலுரையின்போது வாஷிங்டன்னிலிருந்து திட்டத்தைப் பார்வையிடுவதற்கும், மேலும் எப்படிப்பட்ட வழிமுறைகளில் கிராமங்களின் அபிவிருத்திக்கு அமெரிக்க அரசாங்கம் உதவி செய்யமுடியும் என்பதை ஆராய்வதற்காகவும் தான் வந்திருப்பதாகக் கூறினுர். மக்கள் இப்பொழுது சுதந்திரமாக நடமாடுவது பற்றித் தாம் மகிழ்ச்சியடையவதாமவும் ஆறு மாதங்களுக்கு முன்பிருந்த நிலை முற்றுகமாறிவிட்டதைத தங்களால் அவதானிக்க முடிகின்றது என்றும் குறிப்பிட்டார். இளைஞர்கள் கழகம் மூலமாகத் தறசார்பு வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும் கூறினுர்.

திருமதி பாமிலா பல்வில் மழலைத் தமிழில் ஆரம்பத்தில் உரையாற்றினுர். தான் புனருத்தாரண வேலைகளுக்குப் பொறுப்பான அதிகாரி என்று தரிவித்தார். யாழ் அரசாங்க அதிபரைச் சந்தித்துமக்களின் கோரிக்கைகளை ஆராய்ந் நிவாரணக் கொடுப்பனவுகளைத் துரிதப்படுத்துவதற்குரிய வழிகளைக் கையாளப் போவதாகக் கூறினுர். மக்கள் அப்பணத்தைப் பெற்றுத் தொழில் முயற்சியில் ஈடுபட்டு வருமானத்தைப் பெருக்க வேண்டுமே ஒழிய வீண் செலவுகள் செய்யக் கூடாதென்றும் கேட்டுக் கொண்டார். வன்செயலால் பாதிக்கப்பட்ட மக்களின் அனுபவங்களை கேட்டறிந்தனர் கிராமிய மக்களோடு உரையாடி அவர்களின் பிரச்சனைகளை நேரில் கேட்டறிந்ததையிட்டு மகிழ்ச்சிதெரிவித்தனர்.

ஊற்று நிறுவனத்தின் சேவையை யூ. எஸ். அதிகாரிகளும், கிராமிய மக்களும் பாராட்டினர்.

## இலட்சார்ச்சனை

(மானிப்பாய்)

சுழிபுரம் பறுளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிகோவில் ஷண்முகப்பெருமானின் இலட்சார்ச்சனை விழா 27ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து நடைபெறும் இவ் வைபவத்தில் இம்மாதம் 30ம் திகதி கார்த்திகை உற்சவமும், 31ம் திகதி கும்பாபிஷேகமும், ஏப்ரல் 1ம் திகதி இலட்சார்ச்சனை பூர்த்தியும், பஞ்சகுண்ட சங்காபிஷேகமும் நடைபெறும். (71)

## உங்கள் பிரச்சனை என்ன?

**கேள்வி:** 82ம் ஆண்டு முதல் சேமலாபநிதி செலுத்தினேன். 89ம் ஆண்டு சேவையிலிருந்து விலகி விட்டேன். சேமலாபநிதி பெறுவதற்கு 55வயதுவரை காத்திருக்கவேண்டுமா? எவ்வாறு பெறலாம்?

வி. ஈஸ்வரன் சுளிபுரம்.

**பதில்:** ஆறு காரணங்களுக்காக ஊழியர் சேமலாபநிதியிலிருந்து பணம்மீளப்பெறலாம் என அதிகாரி கூறியுள்ளார். (1) ஆண்கள் 55வயது முடிந்து சேவையிலிருந்து இளைப்பாறினுல் (2) பெண்கள் 50வயது முடிந்து வேலையிலிருந்து இளைப்பாறினுல் (3) பெண் ஊழியராக இருந்து திருமணம் காரணமாக வேலையிலிருந்து நீங்கினுலும் மீளப் பெறலாம். சேவையிலிருந்து விலகிய திகதி, திருமணப் பதிவுக்குமுன் மூன்று மாதங்களுக்குள் இருக்க வேண்டும். அல்லது திருமணம் செய்தபின் இருவருடங்களுக்குள்ளும் இருக்கவேண்டும். (4) இந்த நாட்டைவிட்டு நிரந்தர வதிவிடத்துக்காக, இன்னொரு நாட்டுக்குக் குடிபெயர்ந்தால் (5) நோய் காரணமாக வைத்திய ரீதியாக ஒரு நபர் தொடர்ந்து தொழில் பார்க்க முடியாது என்று உறுதிப்படுத்தப்பட்டால் (6) தனியார் துறையிலிருந்து அரச துறையில் நிரந்தர நியமனமும் ஓய்வூதியம் பெறுவதற்காக ஒருவர் நியமனம் பெற்றிருந்தால்.

மேற்கூறிய காரணங்களுக்காக மனுச்செய்யும் பொழுது "K" படிவத்தில் மனுச்செய்யவேண்டும். வைத்திய காரணமாக இருந்தால் "M" படிவம் அரச வைத்தியரினுல் பூரணப்படுத்தப்பட்டு உறுதிப்படுத்த வேண்டும். படிவங்கள் கிட்டிய தொழில் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம். (152)

# புத்தாண்டு விழா ஏற்பாடுகள் துரிதம்

[யாழ்ப்பாணம்]

தமிழ் சிங்கள புத்தாண்டுத் தினத்தில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின்கீழ் பல போட்டிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தாச்சிப்போட்டி, கயிறிழுத்தல் போட்டி, பெண்களுக்கான கயிறடித்தல்போட்டி, மென்பந்து - கிரிக்கெட் போட்டி, சிங்கள இந்து புது வருடம் என்னும் தொனிப்பிலான நாட்டுப்பாடல் போட்டி ஆகியன இடம்பெறவிருக்கிறது. இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 30ம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும்.

இவ்விழாவில் 'பஞ்சகல்யாணி' அம்சங்களை மதிப்பிட்டு பாரம்பரிய உடைகளை அணிந்து தெரிவுசெய்யும் 'புத்தாண்டு மங்கை'ப் போட்டியில் வெற்றிபெறும் மங்கையர் முதல் மூன்று பேருக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும். இவர்கள் மாவட்ட மங்கை தெரிவுப் போட்டியிலும் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.

இவ்விழா ஏப்ரல் மாதம் 15-ம் திகதி நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (152)

## இராசி பலன்

**22 - 03 - 1990**

**வியாழக்கிழமை**

மேடம்- மனதில் தெம்பு, புதிய உறவு, பணவரவு, தொழில் மேன்மை, உபசரணை,

இடபம்- தொழில்மாற்றம், குடும்ப அமைதி, பயணங்களால் காரியசித்தி, அதிகாரம்.

மிதுனம்- வைத்திய செலவு, எதிரிகள் தொல்லை, காரியக் கேடு பணக்கஷ்டம், குடும்பக் கவலை.

கடகம்- விரக்தி நிலை, சொத்து மூலமான தகராறு, அலைச்சல் மிகுதி, குடும்ப விரோதம்.

சிங்கம்- மகிழ்ச்சியான சூழ்நிலை, பணவரவு, மங்களகாரியம், அநாவசிய செலவு, புகழ்.

கன்னி- முரண்பாடு கொள்ளல், வேலைப்பளு, பயனற்ற பிரயாசம், மனைவியால்கவலை.

துலாம்- தொழிலபிரச்சனை, அதிகாரிகள்தொல்லை,விரோத உணர்வு, குடும்பசுகம்.

விருச்சிகம்- திருமணயோகம் பெண்வழி உறவு, குடும்ப உல்லாசம், தொழில் சிறப்பு.

தனுசு- மனப்போராட்டம், அலைச்சல் மிகுதி, கடன்படல், கவலை, தொழில் லாபமின்மை

மகரம்- சகோதர உதவி, தனதானிய சிறப்பு, வேலையாள் சகாயம், காரியவெற்றி, பாராட்டு.

கும்பம்- தொழில் குறைவு, பணமூலமான கவலை, மாமனுர் தொல்லை, குடும்பசிக்கல், மனச்சுமை.

மீனம்- குழப்பம் ஏற்படுத்தல், தொழில் மந்தம், குடும்ப சுகம், பண்பான உபசரணை, முன்னேற்றம்.

## பஞ்சலிங்கம்வீதி திறப்பு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட முன்னேற்றத்திற்கு மிகவும் பாடுபட்ட அமரர் பஞ்சலிங்கம் நினைவாக, கிளிநொச்சி கனகபுரம் இரண்டாம்பண்ணை இரண்டாம் குறுக்கு வீதிக்கு அமரர்பஞ்சலிங்கம்வீதி என்று பெயர் சூட்டப்பட்டு எதிர் வரும் 24ம் திகதி திறந்துவைக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி இந்து இளைஞர் கலாச்சாரமன்ற ஏற்பாட்டில் நடைபெறும் இவ்வீதித்திறப்பு விழாவில் விடுதலைப் புலிகள் இயக்க மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கோபி வீதியை திறந்துவைப்பார்.

இவ்வைபவத்தில் டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி திரு. இ. சரவணபவானந்தன், பிரசைகள் குழுத்தலைவர் திரு. எஸ் சிவராசலிங்கம், கொத்தணி அதிபர்திரு. என். சோதிநாதன், திரு. எம். சிவபாலன் கலாசார அவைத்தலைவர் திரு. வீரசிங்கம், இராமசாமிப் பிள்ளை, லோகநாதன், திரு. என். சிவலிங்கம், திரு தர்மராசா, டாக்டர் அருளானந்தம், திரு. கருணுநிதி, வண. செல்லையா ஆகியோர் உரையாற்றுவார்கள். (83)

## யாழ்.மாவட்டத்தில்

# வாகனங்களில் மிதிபலகை பிரயாணத்துக்குத் தடை

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்தில் வாகனங்களின் மிதிபலகையில் பிரயாணம் செய்வதையும், அதிவேகமாக வாகனங்களை ஓட்டிச் செல்வதையும் விடுதலைப் புலிகள் தடை செய்துள்ளனர்.

தடையை மீறும் சாரதி, இயக்குநர் இருவருக்கும் தண்டனையும, சம்பந்தப்பட்ட வாகனம் ஒரு வாரத்திற்குச் சேவையில் ஈடுபடுவதற்குத் தடையும் விதிக்கப்படும். (51)

## அரசாங்க

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பேசுகையில் தற்போதுள்ள சூழ்நிலையில் சங்கம் தீவிரமாக இயங்கவேண்டிய அவசியம் பற்றி வலியுறுத்திஞர்

நடப்பு வருடப் பொதுக் கூட்டம் இவ்வாண்டு நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட இருப்பதால் சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் அவர் அங்கத்தினர்களைக் கேட்டுக் கொண்டார். பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: எஸ். பத்மநாதன் [கல்வித்திணைக்களம்], உப தலைவர்: க. கனகசபாபதி (தேர்தல் திணைக்களம்), செயலாளர்: க. மகாலிங்கம், (கல்வித் திணைக்களம்), உப செயலாளர்; க செல்வராஜா (தொழில் திணைக்களம்), பொருளாளர்: திருமதி என். செல்லம்மா (கல்வித் திணைக்களம்), உப பொருளாளர்: வி. வி. இராஜரத்தினம் (தோதல் திணைக்களம்) (54)

# பாடசாலைகளின் 2ம், 3ம் தவணை விபரம்

(உடுவில்)

இந்த ஆண்டுக்கான பாடசாலைகளின் இரண்டாம் மூன்ரும் தவணைக் காலங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக சகல பாடசாலை அதிபர்களுக்கும் யாழ்ப்பாணம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

புதிய தவணை திகதி விபரம் பின்வருமாறு-

### சிங்கள, தமிழ் பாடசாலைகள்

**2ம் தவணை**

1990 மே மாதம் 2ம் திகதி புதன்கிழமை தொடக்கம் ஆகஸ்ட் மாதம் 9ம் திகதி வியாழக்கிழமை வரை (இரு தினங்களும் உட்பட).

**3ம் தவணை**

1990 செப்டம்பர் மாதம் 5ம் திகதி பதன்கிழமை தொடக்கம் நவம்பர் மாதம் 30ம் திகதி வெள்ளிக்கிழமை வரை (இரு தினங்களும் உட்பட).

### முஸ்லிம் பாடசாலைகள்

**2ம் தவணை**

1990 மே மாதம் 2ம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 9ம் திகதி வரை (இரு தினங்களும் உட்பட).

**3ம் தவணை**

1990 செப்டம்பர் மாதம் 5ம் திகதி முதல் நவம்பர் மாதம் 30ம் திகதி வரை (இரு தினங்களும் உட்பட). (109)

## யாழ் நகரில்

# போக்குவரத்து விதிகள் முழுமையாக அமுல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை பகுதியில் வீதிப் போக்குவரத்து விதிகள் முழுமையாக அமுல் செய்யப்பட்டன. காலை எட்டு மணிமுதல் மாலை ஐந்து மணி வரை கோல உடை தரித்த பன்னிரெண்டு ஊழியர்கள்இப் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

பொதுமக்கள் தாமாகவே இவ்விதிகளை அனுசரித்து நடந்து கொண்டதைகாணக் முடிந்தது. எனினும் மாலை ஐந்து மணிக்குப் பின்னர் பழைய முறைப்படியே வாகனங்கள் சென்றன.

கொழும்பு பஸ்கள்நேற்று முன்தினம் காலை கொழும்புக்கு செல்லவில்லை மாலையில்பழைய இடத்திலே இருந்து சென்றன. வீதிப்போக்குவரத்து நடைமுறைப்படுத்தப்பட்ட நேரத்தில் வாகன நெரிசல் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (12)



விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட தலைமை அலுவலகத் திறப்பு விழா நேற்று முன் தினம் கோண்டாவிலில் நடைபெற்றது. தலைமை அலுவலகத்தை வைபவ ரீதியாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மாத்தயா திறந்து வைப்பதை இங்கு காணலாம்.

## 'ஈழத்துஇசைநாடகவரலாறு தனித்துவமானது'

(யாழ்ப்பாணம்)

''இலங்கையில் நாடக வரலாறு பற்றி எழுந்தநூல்களுள் காரை. செ. சுந்தரம்பிள்ளை எழுதிய 'ஈழத்து இசைநாடக வரலாற்றுக்குத் தனித்துவமான ஓர் இடமுண்டு. ஏனெனில் ஒரு காலத்தில் மிகவும் பிரபலமாக விளங்கிய விஷேசமான நாடகம் அண்ணவிமார் நாடகம், கொட்டகைக்கூத்து என்றெல்லாம் பேசப்பட்ட நாடகமரபை ஆராய்ந்து எம்மால் மறக்கப்பட்ட எத்தனையோ தகவல்களை வெளிக் கொணர்ந்த சிறப்பு இந்நூலுக்குண்டு. இனிமேல் இசைநாடகத்தை ஆராயப் புகுவோர் இந்நூலைப் புறக்கணித்துவிட்டுத் தம்ஆய்வைச் செய்யமுடியாது.''

என்று கலாநிதி சி. மௌனகுரு மேற்படி நூலின் அறிமுக விழாவின் போது குறிப்பிட்டார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில், நுண்கலை மன்றத்தின் ஆதரவில் கலாசாலை அதிபர் வை. கா. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற மேற்படி அறிமுக விழாவில் தொடர்ந்து பேசிய திரு. மௌனகுரு; ''ஒரு காலத்தில் இசைக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து ஆடப்பட்ட இந்த நாடகத்தை, நடிப்புக்கும் சிறப்பிடம் கொடுத்துப் புதுவடிவமளித்த பெருமை நடிகமணி வி. வி. வைரமுத்துவுக்கேயுண்டு என்று பாராட்டினார்.

திரு. ஆ. சபாரத்தினம் தமது ஆசியுரையின் போது, ''பண்டிதமணி கணபதிப்பிள்ளை போன்றோரால் பெரிதும் பாராட்டப்பட்ட, காரை நகர் தந்த அருணாசலம் சட்டம்பியார் போன்றவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கலாசாலையில். தமிழறிஞர் மகாலிங்கசிவம் போன்றோர் தமிழ்ப் பணி புரிந்த இடத்தில் காரை செ. சுந்தரம்பிள்ளையும் பணி புரிவது பொருத்தமுடையதே எனக்கூறினர்.

இயலிசைவாரிதி ந.வீரமணி ஐயர், காரை. செ. சுந்தரம் பிள்ளையை வாழ்த்திப்பாடினார். ஆசிரிய மாணவர்களாகிய க. இ. கமலநாதன், பொ. இராசகோபால் ஆகியோரும் இவ்விழாவில் பேசினர். சிரேஷ்டமாணவதலைவர் சி. சிவராஜன் வரவேற்புரையும், நுண்கலைமன்றச்செயலாளர் செல்வி நா. குஞ்சலம்மாள் நன்றியுரையும் வழங்கினர்.

## அ. செ. மு. க்கு காசோலை அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து, தமிழ் கலாசார அமைச்சின் கலைஞர்களை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ் பழம்பெரும் எழுத்தாளர் திரு. அ. செ. முருகானந்தனுக்கு 7.000 ரூபாவுக்கான காசோலையும், நாதஸ்வர வித்துவான் திரு. பி. எஸ். ஆறுமுகம்பிள்ளைக்கும், உடுக்குக் கலைஞர் திரு. சிதம்பரப் பிள்ளைக்கும் தலா ஐயாயிரம் ரூபாவுக்கான காசோலையும் வழங்கப்பட்டன. அளவெட்டியில் நடைபெற்ற வைபவத்தில் இந்து தமிழ் கலாசார அமைச்சின் பிரதிநிதியாக யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த எழுத்தாளர் சோமகாந்தனால் மேற்படி காசோலைகள் கையளிக்கப்பட்டன.

எழுத்தாளர்களான டொமினிக்ஜீவா, செங்கைஆழியான் வரதர், அநுவை நாகராசன் ஆகியோர் உட்பட பலர் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர். (152)


நாயகன்
இன்றைய நாயகன்!
தணிக்கை சபையால்
தடைப்பட்ட நாயகன்!!

ஹரன் திரையில்
4-வது வெற்றிவாரமாக
நாயகன்!!!
தினசரி: காலை 10-30,
2-30, மாலை 6-30
★ கமலஹாசன்
★ சரண்யா
★ ஜெனகராஜ்

நாயகன்

(கலர்)


## கிராமஅபிவிருத்தி கலந்துரையாடல்

(மானிப்பாய்)

நவாலி முருகானந்தா சனசமூகநிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் திரு. வே. சிற்றம்பலம் தலைமையில் வெள்ளிவிழா மண்டபத்தில் நடைபெற்றது.

நவாலி முருகானந்தா மாதர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்கம், அந்திராண் முருகமூர்த்தி கோவில் பரிபாலனசபை, முருகானந்தா கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம், எப். ஆர். எஸ். ஸ்தாபனம் ஆகியன கலந்து கொண்டு கிராம அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடலை நடத்தியதுடன் நடைமுறைப் படுத்தவேண்டிய திட்டங்கள் குறிததும் விரிவாக ஆராயப் பட்டன.

நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: வே. சிற்றம்பலம், உபதலைவர்: ச. சிவசோதிராசா, செயலாளர்: செ. மகேந்திரன், இணைச் செயலாளர்கள்: செல்வி மு. கோணேஸ்வரி, கோ. கிருஷ்ணனந்தன், பொருளாளர்: கு. சிவலிங்கம், கலைக் குழுத் தலைவர்; க. சிவானந்தராசா, விளையாட்டுக் குழுத் தலைவர்: ஞா. சுபாஸ்கரன், கணக்குப் பரிசோதகர்: செ. முத்துலிங்கம்.

இத்துடன் பத்துப் பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப் எட்டனர். (71)

## தையல் பயிற்சிநிலையம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஊரதீவுப் பகுதியில் அரசாங்கத்தின் உதவியுடன் தையல் பயிற்சி நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (101)

## "சமய, சமூகப் பணிகளில் முன்மாதிரியாகத் திகழ்ந்தவர்"

(யாழ்ப்பாணம்)

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளையில் பல வருட காலமாகத் துணைத் தலைவராகச் சேவையாற்றிய அமரர் ஏ. அம்பலவாணரின் மறைக்கு உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளை அனுதாபம் தெரிவித்து அஞ்சலி செலுத்தியுள்ளது.

இலங்கைக் கிளைத் தலைவர் சட்டத்தரணி திரு. பொன். பூலோகசிங்கம் இரங்கல்கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில், ''மறைந்த அம்பலவாணர் உலகத் தமிழரின் மேம்பாட்டிற்காக அரும்பணி ஆற்றினர். சமய, சமூகப் பணிகளில் அவர் காட்டிய ஈடுபாடு முன்மாதிரியானது'' என்று கூறினர்,

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளை இணைச்செயலாளர் திரு. சி. சி. வரதராசா பேசும் பொழுது, ''மறைந்த பெரியார் பொதுச்சேவையில் தன்னை வெகுவாக ஈடுபடுத்திக்கொண்டவர். சுயநலமற்ற சேவையினால் எல்லோரது அன்பையும் சம்பாதித்துக் கொண்டவர்'' என்று குறிப்பிட்டார்.

திருவாளர்கள் இ. தவகோபால், சிவா ஆறுமுகசாமி, ச. செந்தூர்ராசா, 'உலகத் தமிழன் குரல்' ஆசிரியர் ஆ. சண்முகலிங்கம், இ. சிறீசற்குருநாதன் ஆகியோரும் பேசினர். (54)

## "வயோதிபர்களை பாதுகாக்க வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

''வயோதிபர்களைப் பாதுகாக்கவேண்டும். நாட்டுக்காகவும், நமது சந்ததியினருக்காகவும் உழைத்த வயோதிபர்களுக்கு நாம் நன்றிசெலுத்தவேண்டும். வயோதிபர்கள் சமயநெறியில் நின்று, தமது வாழ்வில் நிறைவைப் பெற முடியும்.

இவ்வாறு 'சிவநெறிச் செல்வர்' திரு. க. கனகராசா கைதடி அரசினர் முதியோர் இல்லத்தில் அன்பளிப்புக்களை வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் முதியோர் இல்ல வயோதிபர்களுக்கு சவர்க்காரம், சமயநூல்கள் ஆகியவற்றை வழங்கினர்.

''ஆத்மஜோதி'' நா. முத்தையா, யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை செயலாளர் திரு. சி. சி. வரதராசா ஆகியோரும் கைதடி முதியோர் இல்லத்திற்குச் சென்றிருந்தனர், (54)

## மெய்வல்லுநர் போட்டி

(வட்டுக்கோட்டை)

கிளிநொச்சி குமுளமுனை அ. த. க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 24-ம் திகதி வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு. கு. நோத்திரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கிளிநொச்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதமும், சிறப்பு விருந்தினராக முழங்காவில் கொத்தணி அதிபர் திரு. க. சாம்பசிவமும் கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம், பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே.பாலசுப்பிரமணியம், குமுளமுனை பங்குத் தந்தை வண. பிதா ஜேம்ஸ்லோகநாதன் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர். (139)

## கிருபை இல்லம் முதலிடம்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நடைபெற்றபோது கிருபை இல்லம் 277 புள்ளிகளை எடுத்து முதலாமிடத்தைப்பெற்று வெற்றிக்கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது

இப்போட்டியில் ஹொவுலன்ட் இல்லம் 200 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், ஹில்லீஸ் இல்லம் 151 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றன.

கல்லூரி அதிபர் திருமதி தே. தம்பிராசா தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் பிரதம அதிதியாக யாழ் கல்வித் திணைக்கள பாடசாலைக் கட்டிடபொறியியலாளர் திரு. எம். ஏ. பிரான்சிஸ் கலந்து கொண்டார். போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை திருமதி பிரான்சிஸ் வழங்கினார் [72]

## விளையாட்டுப் போட்டி

[புங்குடுதீவு]

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவினுல் தீவுப்பகுதி விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடாத்தப்படும் கரபந்தாட்டம், எல்லே, உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுக்கள் இம்மாதம் 27-ம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது.

## இமையாணன் முதலிடம்

(நெல்லியடி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுக் கழகத்தினுல் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றது.

இப் போட்டியில் இமையாணன் விளையாட்டுக்கழகம் 81 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், துன்னாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 73 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், நெல்லியடி விளையாட்டுக் கழகம் 61 புள்ளிகளைப் பெற்று மூன்றும் இடத்தையும் பெற்றன. (55)

## விவசாயிகளுக்கு இலவச மண்வெட்டி

(மட்டுவில்)

தென்மராட்சியிலுள்ள விவசாயிகளுக்கு இலவச மண்வெட்டிகள் வழங்கப்பட்டன.

இங்குள்ள முப்பத்திரண்டு கிராமசேவை அலுவலர்கள் பிரிவிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட நூறு விவசாயிகள் இந்த இலவச மண்வெட்டிகளைப் பெற்றுக்கொண்டனர். இந்த மண்வெட்டிகளை உலக சிறுவர் பராமரிப்பு நிலையம் நன்கொடையாக வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

பாடசாலை கிரிக்கெட் போட்டி:

# பணம் வசூலிப்பதற்கு அதிபர்கள் கண்டனம்!

(யாழ்ப்பாணம்)

நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாக இருக்கும் 'சென்றல் - சென். ஜோன்ஸ்' கல்லூரிகளின் கிரிக்கெட் போட்டியை காரணமாக வைத்து சிலர் பொதுமக்களிடம் பணம் வசூலிப்பதை, இவ்விரு கல்லூரி அதிபர்களும் வன்மையாகக் கண்டித்துள்ளனர்

இவ்விரு கல்லூரி அதிபர்களும் கூட்டாக நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

மேற்படி போட்டியை முன்னிட்டு சிலர் பொதுமக்களிடம் வீதிகளிலும், வீடுகளிலும் சென்று பணம் வசூலிப்பது மட்டுமின்றி பஸ் நிலையம், ரயில் நிலையம் போன்ற இடங்களிலும் நின்று பொது மக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்துவதுடன் அவர்களிடம் பணமும் வசூலிக்கும் போது கோஷ்டி மோதல்களும் ஏற்பட்டுள்ளதாக, எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

இதுபோன்று பணம் வசூலிக்கும்படி, நாம் யாருக்கும் அனுமதி வழங்கியது கிடையாது. ஆகவே, பொதுமக்கள் விழிப்புடன் இருந்து இந்த நடவடிக்கைகளுக்கு எந்த ஒரு ஆதரவும் கொடுக்கவேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறோம். (வி)

## மக்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. மாத்தயாவுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் வடமராட்சிப் பொறுப்பாளர் திரு.சூசை, திரு சுரேஸ், வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர் திரு. விக்னு ஆகியோரும் வருகைதந்தார்கள்.

மருதங்கேணியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து, அப்பகுதிப் பிரமுகர்களைச் சந்தித்து, பகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிந்ததுடன், இன்றைய அரசியல் நிலைமை குறித்தும் எடுத்துக் கூறினர். (53)

## யாழ். ஆஸ்பத்திரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, விடத்தற்பளை, கரம்பைக்குறிச்சி, சாவகச்சேரி கிழக்கு, கச்சாய், அல்லாரை ஆகிய பகுதிகளுக்கு 1700 குடும்பங்களுக்கு 2ம் கட்ட நிவாரண நிதி வழங்கியுள்ளோம். இம்மாதம் 22ந் திகதி (இன்று) கல்வயலுக்கும், 26ந் திகதி மீசாலை தெற்குக்கும், இலங்கை வங்கி ஆஸ்பத்திரிக் கிளை மூலம் நிவாரணம் வழங்க ஏற்பாடாகியுள்ளது. நிவாரணம் சம்பந்தமாக மார்ச் 26ந் திகதி ஒரு மாநாடு நடத்த எண்ணியுள்ளேன்'' என்று தெரிவித்த யாழ். அரச அதிபர்;

''யாழ். ஆஸ்பத்திரி ஐந்து மாடிக் கட்டிடத்தின் வேலைகளைத் தொடருவது பற்றி ஏப்ரல் 2ந் திகதி அதிகாரிகள் மட்டத்தில் ஒரு மாநாடு கூட்ட எண்ணியுள்ளேன். அந்த மாநாட்டில் தான் ஆஸ்பத்திரி வேலைகள் பற்றி முழுமையாக ஆராயப்படும்'' என்றார். (152)

## மரண அறிவித்தல்

### திருமதி நேசரட்ணம் நவரட்ணராஜா

கோண்டாவில் கிழக்கைச்சேர்ந்த திருமதி நேசரட்ணம் நவரட்ணராஜா நேற்றுக்காலமானார். இவர் காலஞ்சென்ற நவரட்ணராஜா [ஆசிரியர்] அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிற்றம்பலத்தின் அன்புச் சகோதரியும், பாலேந்திரா [கணக்காளர் - லண்டன்], சரோஜினி, லலிதா, [லிகிதர் கோப்பாய் ஆசிரியகலாசாலை] ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தி [லண்டன்], புவனேந்திரன் [வைத்திலிங்கம் அன் கம்பெனி] சோதிராஜா [பொறியியலாளர் - நீர்ப்பாசனதிணைக்களம் ஒட்டுசுட்டான்] ஆகியோரின் அன்புமாமியும், கிரிசாந்தி, ஜஸ்மின், ஜோபிகா, வசீகரன், கஜந்தி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை [22 - 03 - 1990] மாலை 4-00 மணியளவில் கோண்டாவில் கிழக்கிலுள்ள ''நேசஸ்தான்'' இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக கிரியைக்காக கோண்டாவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்: குடும்பத்தினர்

''நேசஸ்தான்''
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

சி-3634

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு பங்குனி மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரீ மத் வாலாம்பிகா ஸ்ரீ வைத்தீஸ்வரா சுவாமிகள் 2-ம் திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறுகிறது. இன்று சுவாமிகள் மஞ்சத்தில் எழுந்தருளி வீதி உலாவருவார்.

## சத்துணவுத் திட்டம்

[புங்குடுதீவு]

புங்குடுதீவு ஊரதீவு பகுதியில் உள்ள குழந்தைகளுக்கு, சத்துணவு வழங்கும் திட்டமொன்று யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினரால் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் அங்கு நடைபெற்றுவருகிறது

## நிரந்தர செயலாளர்

(மானிப்பாய்)

வடக்கு - கிழக்கு மாகாண சபையின நிரந்தரச் செயலாளர்கள் இனிமேல் ஐந்து பேராகக் குறைக்கப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (71)

பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயத்தில்

# 'பக்திபூர்வமாக நடந்த பொங்கல் உற்சவம்

(மட்டுவில்)

சரித்திரப் பிரசித்திபெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயத்தின் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் பக்திபூர்வமாக நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் புனித தீர்த்தமாடி, பொங்கலிட்டு மாவிளக்கேற்றினர். பாற் காவடிகளும் ஏராளமாகக் காணப்பட்டன.

மட்டுவில் மன்றித்தலைச்சி அம்பாள் பங்குனித் திங்கள் உற்சவத்திற்கென விசேட பஸ் சேவைகள் சாவகச்சேரியிலிருந்து மட்டுவில்லுக்கு ஒழுங்கு செயய்யப்பட்டிருந்தன.

ஆலயத்தில் அசம்பாவிதம் எதுவும் இடம்பெருதவகையில் தொண்டர் படையினர் கடமையில் ஈடுபட்டிருந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் தொண்டர்களும் பாதுகாப்புகளை வழங்கி அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டினர்.

அதிகாலையில் 'அரோஹரா' ஒலியுடன் ஆரம்பமான இந்தப் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் பக்திபூர்வமாக மாலை ஏழு மணிவரை நீடித்தது சுமார் ஆயிரத்திற்கும் அதிகமான பக்தர்கள் தமது நேர்த்திகளை நிறைவேற்றினர்

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயத்திலும், மட்டுவில் நுணுவிற்குளம் கண்ணகை அம்பாள் ஆலயம், நுணுவில் சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கை அம்பாள் ஆலயம் உட்படப் பல ஆலயங்களிலும் இந்த ஆண்டு பக்திபூர்வமாகப் பொங்கல் உற்சவம் நடைபெற்றது

கடந்த காலங்களைவிட இந்த ஆண்டு தண்ணீர்ப் பந்தல்கள் அதிகமாகக் காணப்பட்டன. ஆலயங்களில் நீர்க்கஞ்சியும் அடியார்களுக்கு வழங்கப்பட்டது. மட்டுவிலின் மகிமையென்று கூறப்படும் முட்டிக் கத்தரிக்காயும் இன்று சந்தைக்கு முதன்முதலாகக் கொண்டு வரப்பட்டது. (82)

## வடக்கு-கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து மேற்படி அலுவலகம் மூடப்பட்டுள்ளது.

இவ்வலுவலகத்தில் பயன்படுத்தப்பட்ட சகல தளபாடங்கள் மற்றும் உபகரணங்களும் யாழ். அரசாங்க அதிபரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன. (71)

## விடுதலைப் புலிகளின் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுக்கூட்டமும், கலை கலாசாரப் பிரிவின்ர் வழங்கும் 'நடந்துவந்தபாதை' வில்லிசையும், 'விடியலைத்தேடுவோம்' இசை நாடகமும் இன்று வியாழக்கிழமை மாலை 7-00 மணிக்கு காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

## யாழ். செஞ்சிலுவை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியுதவியும் பெரும் உதவியாக விருந்தது. எமது நிவாரண, புனர்வாழ்வுப் பணிகள் தொடர எமக்கு மக்கள் ஆதரவும், நிதியும் மேலும் அவசியம். தொடர்ந்தும் சர்வதேச நிதியுதவிகள் எங்களுக்குக் கிடைக்குமென்றாலும் நாம் எமது பங்களிப்பாக ஒரு சிறு தொகையையேனும் செலுத்த வேண்டும்.

''நாம் எமது முயற்சியால் சேவைகளைத் தொடரவேண்டிய காலம் வெகுதூரத்திலில்லை. எப்போதும் நாம வெளிநாடுகளின் உதவியை எதிர்பார்த்துநிற்க முடியாது என்து தெளிவு. ஆகையால் இதில் ஒரு ஆரம்பப்படியாக இந்தமுறை கொடிதினத்திற்கு உங்களால் இயன்ற நிதியுதவியைச் செய்யுமாறுவேண்டுகின்றோம்''. (து)

# கிளிநொச்சி உதயநகரில் அன்னை பூபதிக்கு அஞ்சலி

[கிளிநொச்சி]

அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி வைபவம் உதயநகர் கிழக்கு மக்களால் கடந்த 12-ம் திகதி நடத்தப்பட்டது.

இவ்வைபவத்தை உதயநகர் கிழக்கு கிராமசேவையாளர் திரு. சிவஞானசுந்தரம் ஆரம்பித்து வைததார். இதற்கான ஏற்பாடுகளை உதயநகர் கிழக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி சிற்றூரவை செய்திருந்தது.

திருமதி யோகராஜா வை. குசலகுமாரி, தேவமரிக் கொழுந்து, கணபதிப்பிள்ளை, யோகம்மா ஆகியோர் அடையாள உண்ணுவிரதத்தை மேற்கொண்டனர்.

தொடர்ந்து ஏப்பரல் மாதம் 19-ம் திகதிவரை சுழற்சிமுறை உண்ணுவிரதம இங்கு மேற்கொள்ளப்படவிருப்பதாக சிற்றூரவை செயலாளர் திரு இரா. லோகநாதன் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் பெருந்தொகையான பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர். (83)

# சாவகச்சேரி வர்த்தக சங்கத்துக்கு பாராட்டு

(மட்டுவில்)

''கடந்த காலங்களில் சாவகச்சேரி வர்த்தகர் சங்கம் சளைக்காமல் மேற்கொண்ட மக்கள் சேவைக்கு மதிப்பளித்துப் பாராட்டுத் தெரிவிக்கும் அதேவேளையில், எதிர்காலத்திலும் ஏதாவது கஷ்ட நிலைமைகள் ஏற்பட்டாலும்கூட வர்த்தகர்கள் தமதுசேவையை மக்களுக்குப் பயன்படும்வகையில் மேற்கொள்ளவேண்டும்'';

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சிப் பிரதேச அரசியற் பொறுப்பாளர் திரு. எஸ். பி. கே. பாப்பா வர்த்தகர் சங்கத்தைக் கேட்டுக்கொண்டார்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் சாவகச்சேரி வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. துரைராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சாவகச்சேரி வர்த்தகர் சங்கக் குழு, சாவகச்சேரி வகுப்புத் தொழிலாளர் சங்கக் குழு, வர்த்தகர் சங்க ஊழியர் குழு ஆகியன கலந்துகொண்டன.

திரு. பாப்பா மேலும் பேசுகையில்; ''கடைகள் காலையில் திறக்கப்படுவதைத் தொடர்ந்து மக்களின் அன்றாடத் தேவைகள் பூர்த்திசெய்யப்படுகின்றன. அத்துடன் இரவுநேரமும் கடைசி எட்டு மணிவரையிலாவது கடைகள் திறக்கப்பட்டிருப்பதனால் இப்பகுதியில் பொதுமக்களுக்குப் பல துறைகளிலும் உதவியாக அமையும்'' என்றார்'

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பச்சிலைப்பள்ளிப் பிரதிநிதி திரு. கடாபி மாஸ்டர் உட்படப் பலர் பேசினர். (82)

## இந்திய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குஷ்பீற்றகுமார், சென்னையிலுள்ள கப்பல்படை அதிகாரி காமடோர் எஸ். பத்மாசங்கர் மற்றும் விமானப்படை அதிகாரிகள் ஆகியோர் அமைதிப்படையினரை வரவேற்றனர்.

நேற்று சென்னை வந்த அமைதிப்படையின் பிரிவு இலங்கையின் வடபகுதிகளிலிருந்து வந்த கடைசிப்பிரிவாகும்.

இந்தப் பிரிவு இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அடுத்து 1987 - ம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கைக்கு அனுப்பப்பட்டது.

இதேவேளையில் திருமலையில் மட்டும் தற்போது சுமார் இரண்டாயிரம் அமைதிப் படையினர் இருக்கிறார்கள், இந்தப் படை வரும் வரும் சனிக்கிழமைக்குள் முற்றாக வெளியேறி விடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (து)

## இளைஞர்களின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொட்டாஞ்சேனை புனித பெனடிக்ற் கல்லூரியின் 125 வது வருட நிறைவை முன்னிட்டு இடம் பெற்ற வைபவத்தில் உரைநிகழ்த்திய ஜனாதிபதி மேலும் கூறியதாவது!

வசதி படைத்த ஒரு சிறிய பிரிவின் முன்னேற்றம் தேசிய அபிவிருத்தியாக மாட்டாது.

வருங்கால முன்னேறறத்தை நம்பியிருக்கும் நாட்டு மக்கள் தங்கள் மனோவலிமையாலும் உடல்வலிமையாலும் இதற்குப் பயன் படுத்தவேண்டும் என்றார்.

## தமிழ் நாட்டில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரிஸா மாநிலத்திற்கு அனுப்பப்பட்டவர்கள் தமிழ்ப் போராளிகள் என்பதனால் தான் அவர்களைத் தமிழகத்தில் இறங்கவிடாமல் திருப்பி அனுப்பினோம்.

அகதிகளாக வருபவர்களுக்குத் தமிழ்நாடு நிச்சயம் புகலிடம் அளிக்குமென்றும் தெரிவித்த அவர், 1983ம் ஆண்டிற்குப் பிறகு சுமார் 1 லட்சம் இலங்கைத் தமிழர்கள், தமிழ் நாட்டுக்கு அகதிகளாக வந்தார்கள். இவர்களில் 18 பேர் மட்டுமே தங்களை அகதிகளாகப் பதிவுசெய்துகொண்டனர்.

இலங்கைக்குத் திரும்பாத மக்களில் பலர், தமிழ்நாட்டு மக்களோடு ஒன்றுபட்டு, மாநிலத்தின் பல்வேறு இடங்களில் வாழ்ந்து வருகிறார்கள் என்றும் கூறினர்.

அண்மையில்கூட, 3,000 அகதிகள் இலங்கையிலிருந்து தமிழகம் வந்தார்கள். இவர்களுக்கு மாநில அரசு ஆதரவு அளித்தது. அதிகாரிகள் அவர்கள் தங்கியிருக்கும் இடங்களுக்குச் சென்று, அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுத்துள்ளனர்.

## மீளக்குடியமர்த்தல் நிவாரணம்

(புலோலி)

நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையில் மீளக்குடியமர்தல் நிவாரணமாக இரண்டாயிரம் ரூபா கட்டம்கட்டமாக வழங்கப்படும் ஆயிரம் ரூபா நான்கு கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கு எதிர் வரும் 24, 25-ம் திகதிகளில் (சனி, ஞாயிறு) வழங்கப்படவுள்ளது.

இதன்பிரகாரம் இம்மாதம் 24-ம் திகதி சனிக்கிழமை கரவெட்டி மேற்கு கிராமசேவை அலுவலர் பிரிவைச் சேர்ந்த 428 குடும்பங்களுக்கும் 25-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கரணவாய் கிழக்கு கிராம சேவை அலுவலர் பிரிவைச் சேர்ந்த 428 குடும்பங்களுக்கும், கரணவாய் மேற்கு கிராமசேவை அலுவலர் பிரிவைச் சேர்ந்த 130 குடும்பங்களுக்கும், கரணவாய் மத்தி கிராமசேவை அலுவலர் பிரிவைச் சேர்ந்த 152 குடும்பங்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

## முன்னாள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றத்துக்குத் தெரிவானர் என்பது குறிப்பிடத்தக்கது.